# Current Affairs - Shanmugam IAS Study Circle

GK & Current Affairs in Tamil - September 2016

## அனைத்து நடப்பு செய்திகள் - September 2016

### 1.50 ஆண்டுக்கு பின் அமெரிக்கா-கியூபா இடையே முதன் முறையாக விமான சேவை

50 ஆண்டுகளுக்கு பின் அமெரிக்கா -கியூபா இடையே முதன்முறையாக வர்த்தக ரீதியான விமான போக்குவரத்து துவங்கியது. அமெரிக்காவில் இருந்து புறப்பட்ட விமானம் கியூபா சென்றடைந்தது.

அமெரிக்கா-கியூபா நாடுகள் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக பகைமை கொண்டிருந்தன. தற்போது இருநாடுகளும் பகைமை மறந்து நட்பு நாடுகளாயின. இதன் ஒரு பகுதியாக அமெரிக்க அதிபர் ஒபாமா , கியூபா சென்று அந்நாட்டுஅதிபர் ராவூல் காஸ்ட்ரோவை சந்தித்தார். இது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக கருதப்படுகிறது. பின்னர் இரு நாடுகளிடையே தூதரகங்கள் திறக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக முதன்முறையாக அமெரிக்கா- கியூபா இடையே வர்த்தக ரீதியான விமான போக்குவரத்து துவங்கியது.

Shanmugam IAS Study Circle

ஜெட்புளு என்ற விமான நிறுவனத்தின் ஏ.320 விமானம் 150 பேருடன் தெற்கு புளோரிடாவில் இருந்து புறப்பட்டு, கியூபாவின் சான்டா கிளாரா விமான நிலையம் சென்றடைந்தது. விமானத்தில் அமெரிக்க போக்குவரத்துத்துறை அமைச்சர் ஆன்டணி போக்ஸ், ஜெட் புளு நிறுவனத்தின் தலைமை நிர்வாகி ராபின் ஹே உள்ளிட்டோர் பயணித்தனர். இதற்கு முன்னர் கடந்த 1961-ம் ஆண்டு இரு நாடுகளிடையே கடைசியாக விமான சேவை நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது மீண்டும் விமான சேவை துவங்கியுள்ளது.

### 2.கர்நாடக பாடகர் டி.எம்.கிருஷ்ணாவுக்கு மகசேசே விருது

ஆசியாவின் நோபல் பரிசு என்று அழைக்கப்படும் ரமோன் மகசேசே விருது இந்தியாவைச் சேர்ந்த டி.எம்.கிருஷ்ணா, பெஸ்வாடா வில்சன் ஆகியோருக்கு நேற்று வழங்கப்பட்டது.

பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபர் ரமோன் மகசேசே நினை வாக அரசு பணி, பொது சேவை, கலை, சமூகம் என பல்வேறு பிரிவுகளில் ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படுகிறது.

இந்திய கர்நாடக இசையில் சமூக விழிப்புணர்வு கருத்துகளையும் பரப்பி வருவதற்காக பாடகர் டி.எம்.கிருஷ்ணா மற்றும் சமூக ஆர்வலர் பெஸ்வாடா வில்சன் உட்பட 5 பேருக்கு இந்த ஆண்டுக்கான விருது அறிவிக்கப்பட்டது. பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நேற்று நடந்த விழாவில் அவர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

### 3.இந்திய ஆசிரியர் தினம்

இந்தியாவில் முன்னாள் குடியரசுத் தலைவர் முனைவர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணனின் பிறந்த நாளான செப்டம்பர் 5-ம் நாள் ஆசிரியர்கள் நாளாகக் கொண்டாடப்படுகிறது. ஓர் ஆசிரியரான அவர், தனது நண்பர்களும் மாணாக்கரும் தனது பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என விரும்பியபோது, அந்நாளை ஆசிரியர் நாளாகக் கொண்டாடுமாறு வேண்டுகோள் விடுத்தார். 2014 இல் இந்நாளை பெயர் மாற்றம் செய்து, *குரு உத்சவ்* என்று கொண்டாட வேண்டுமென மத்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அறிக்கை வெளியிட்டது. ஆனால் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றும் அந்நாளுக்குரிய கட்டுரைப் போட்டிக்கே அப்பெயர் இடப்பட்டுள்ளதாகவும் நடுவண் கல்வி அமைச்சர் விளக்கம் தெரிவித்தார்

### 4.மகளிர் மட்டும் கொண்ட போலீஸ் ரோந்து வேன்கள்: நாட்டின் முதன்முறையாக டெல்லியில் அறிமுகம்

மகளிர் மட்டும் கொண்ட போலீஸ் ரோந்து வேன்கள் அடுத்த மாதம் டெல்லியில் அறிமுகமாகிறது. இந்தவகை, நாட்டிலேயே முதன் முறையாகக் கருதப்படுகிறது.

துவக்கத்தில் சோதனைக்கட்டமாக இவை ஐந்து வேன்கள் அறிமுகமாக உள்ளன. ஒவ்வொரு வேன்களிலும் ஒரு கமாண்டோ உட்பட மூன்று மகளிர் இருப்பார்கள். இதில் சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களின் அனைத்து புகார் போன்களும் ஏற்கப்பட்டு நடவடிக்கையில் இறங்க உள்ளன. இவை அடுத்து மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

கடந்த டிசம்பர் 16, 2012-ல் மருத்துவ மாணவி டெல்லியில் பாலியியல் பலாத்காரம் செய்யப்பட்டார். கொடூரமான முறையில் நடந்த இந்த சம்பவம் நாடு முழுவதிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுபோன்ற சம்பவங்களை தடுக்க போலீஸ் ரோந்து வேன்களில் மகளிர் போலீஸ் அமர்த்தப்பட வேண்டும் என ஒரு கோரிக்கை எழுந்தது. இதை தொடர்ந்து திட்டமிடப்பட்டு வந்த மகளிர் போலீஸ் ரோந்து வேன்கள் தற்போது அறிமுகப்படுத்தப்படுகின்றன.

டெல்லி போலீஸாரின் ரோந்து வேன்களில் சுமார் 8500 போலீஸார் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கான சுமார் 1000 வேன்களில் 183 பழுதடைந்து கிடக்கின்றன. இதை சரி செய்ய கோரும் டெல்லி போலீஸாரின் கோரிக்கை மத்திய உள்துறை அமைச்சகத்தில் நிலுவையில் உள்ளது. இதுவன்றி, 150 டெல்லியில் விஜபிக்களுக்கான பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். வருடத்திற்கு சுமார் 73 லட்சம் புகார் போன்கள் பெரும் போலீஸ் ரோந்து வேன்கள் தற்போது 657 மட்டும் செயல்பாடுகளில் உள்ளன. நாள் ஒன்றுக்கு 22,000 போன் புகார்களில் ஒரு வேனுக்கு சராசரியாக 30 போன் புகார்கள் வருகின்றன. ஒரு புகாருக்கு நேரில் சென்று நடவடிக்கை எடுக்க ஒரு வேனுக்கு குறைந்தபட்சம் ஒரு மணி நேரம் தேவைப்படும்.

டெல்லி காவல் நிலையங்களில், இந்த வருடம் ஆகஸ்ட் 15 வரை மகளிருக்கு எதிரானப் புகார்கள் 9,898 பதிவாகி உள்ளன. இதில், 1397 பாலியல் பலாத்காரம் 2725 பாலியல் தொந்தரவு வழக்குகள் ஆகும்

### 5.திரிணமூல் காங்கிரஸுக்கு தேசியக் கட்சி அங்கீகாரம்

மேற்கு வங்க மாநிலத்தில் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையில் மம்தா பானர்ஜியின் திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு மேலும் ஒரு பெருமையாக தேசியக் கட்சி என்ற அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம்

Web2PDF
converted by Web2PDFConvert.com

வழங்கியது. இதன்மூலம் நாட்டின் 7-வது தேசியக் கட்சியாக திரிணமூல் காங்கிரஸ் உயர்ந்துள்ளது.

Shanmugam IAS Study Circle

தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) உத்தரவு 1968 விதியின்படி குறைந்தது நான்கு மாநிலங்களில் மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்த ஒரு விதியை திரிணமூல் காங்கிரஸ் பூர்த்தி செய்ததை அடுத்து தேசியக் கட்சி அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கம், மணிப்பூர், திரிபுரா, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், திரிணமூல் மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த அங்கீகாரத்தின் மூலம், திரிணமூல் கட்சியின் சின்னத்தை நாடு முழுவதும் வேறெந்த கட்சிகளோ, சுயேச்சைகளோ பயன்படுத்த முடியாது.

## 6.உஸ்பெகிஸ்தான் அதிபர் மறைவுக்கு பான் கி-மூன் இரங்கல்

உஸ்பெஸ்கிதான் அதிபர் இஸ்லாம் கரிமொவ் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாக ஐ. நா. பொதுச் செயலாளர் பான் கி-மூன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி-மூன் வெளியிட்ட இரங்கல் செய்தியில், "உஸ்பெகிஸ்தான் அதிபர் கரிமொவின் மரணம் மிகுந்த சோகத்தை அளித்துள்ளது. தன்னுடைய பிராந்திய நாடுகள் மற்றும் உலக நாடுகளின் அமைதிக்காக தொடர்ந்து முயன்றவர் கரிமொவ்.

கரிமொவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உஸ்பெகிஸ்தான் நாட்டு மக்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மூளையில் ஏற்பட்ட ரத்தக் கசிவு காரணமாக கடந்த ஆறு நாட்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இஸ்லாம் கரிமொவ் வெள்ளிக்கிழமை மரணம் அடைந்தார். அவருக்கு வயது 78.

## 7.ஹாலிவுட் நடிகர் ஜாக்கி சானுக்கு வாழ்நாள் சாதனையாளர் ஆஸ்கர் விருது



ஹாலிவுட் நடிகர் ஜாக்கி சான், வாழ்நாள் சாதனையாளர் ஆஸ்கர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளார்.

ஹாங்காங்கை சேர்ந்த நடிகர் ஜாக்கி சான் (62) ஹாலிவுட்டில் மிகவும் பிரபலமானார். தற்காப்பு கலை, நகைச்சுவை கலந்த சண்டை காட்சிகளால் குழந்தை கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பும் நடிக ரானார். 'டிராகன் லார்டு', 'புராஜக்ட் ஏ', 'போலீஸ் ஸ்டோரி', 'சூப்பர் காப்', 'பர்பிடன் கிங்டம்' 'ஹூ ஏம் ஐ', 'தி மித்', 'ஷாங்காய் நைட்ஸ்', 'தி டக்ஸீடோ', 'ரஷ் ஹவர்' 'தி கராத்தே கிட்' உள்ளிட்ட 150-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

Shanmugam IAS Study Circle

எனினும், உலகின் மிகப்பெரிய திரைப்பட விருதாகக் கருதப்படும் ஆஸ்கர் விருது இதுவரை ஜாக்கி சானுக்கு வழங்கப்படவில்லை. இந்நிலையில், வாழ்நாள் சாதனையாளருக்கான ஆஸ்கர் விருதுக்கு அவர் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பை, 'தி அகடமி ஆப் மோஷன் பிக்சர்ஸ் ஆர்ட்ஸ் அண்ட் சயின்சஸ்' கடந்த வியாழக் கிழமை அறிவித்தது.

தனது 8 வயதில் இருந்து நடித்து வரும் ஜாக்கி சான், தற்காப்பு கலையை மையப் படுத்தி ஹாங்காங்கில் 30 படங் களை எடுத்துள்ளார். நடிகராக மட்டுமன்றி, எழுத்தாளர், தயாரிப் பாளர், இயக்குநர், பாடகர் என பல துறைகளில் தனது திறமையை பதிவு செய்துள்ளார் ஜாக்கி சான்.

உலகிலேயே அதிக சம்பளம் வாங்கும் 2-வது நடிகர் ஜாக்கி சான் என்று கடந்த ஆகஸ்ட் மாதம் பிரபல 'போர்ப்ஸ்' பத்திரிகை பட்டியலிட்டிருந்தது.

இவருடன் ஆவணப்பட தயாரிப்பாளர் பிரட்ரிக் வைஸ்மேன், இங்கிலாந்து திரைப்பட எடிட்டர் ஆன்னி வி.கோட்ஸ், காஸ்ட்டிங் டைரக்டர் லின் ஸ்டால்மாஸ்டர் ஆகியோரும் 2016-ம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் ஆஸ்கர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நவம்பர் மாதம் நடக்கும் பிரம்மாண்ட நிகழ்ச்சியில் இவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளருக்கான ஆஸ்கர் விருது வழங்கப்பட உள்ளது.

## 8.சொத்து சமநிலை அற்ற நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு 2-வது இடம்

சொத்து சமநிலை அற்ற நாடுகள் பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதாக சமீபத்தில் வெளியான ஆய்வில் தெரியவந்துள்ளது. கோடீஸ்வரர்களும் அல்லது 10 லட்சம் டாலருக்கு அதிகமாக சொத்து வைத்திருப்பவர்களுமே பாதிக்கும் மேலான சொத்துக்களைக் கையாளுகிறார்கள். இதனால் சொத்து சமமற்ற தன்மை இந்தியாவில் நிலவுவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

சொத்து சமநிலை அற்ற நாடுகள் பட்டியல் பற்றி நியூ வேர்ல்டு வெல்த் நிறுவனம் ஆய்வு ஒன்றை நடத்தியது. இந்த பட்டியலில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது. கிட்டத்தட்ட நாட்டில் உள்ள 54% சொத்துக்கள் கோடீஸ்வரர்கள் கையிலேயே உள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

தனிநபர்களின் மொத்த சொத்துக்கள் அடிப்படையில் 10 பணக்கார நாடுகள் பட்டியலில் இடம்பிடித்துள்ளது. இந்தியாவில் உள்ள தனி நபர்களின் மொத்த சொத்துமதிப்பு 56,00,000 கோடி டாலர். ஆனால் சராசரி இந்தியர்கள் ஏழையாகவே இருக்கின்றனர்.

சர்வதேச அளவில் முதலிடத்தில் உள்ள ரஷ்யாவில் 62% சொத்துக்களைக் கோடீஸ்வரர்கள் வைத்துள்ளனர். இந்த ஆய்வு சர்வதேச அளவில் சமத்துவமின்மை நிலையை பற்றி அறிந்து கொள்வதற்காக நடத்தப்பட்டுள்ளது. கோடீஸ்வரர்கள் கட்டுப்பாட்டில் உள்ள சொத்துக்கள் மற்றும் அதிக சொத்துக்களைக் கொண்ட தனிநபர்கள் ஆகியவற்றை வைத்து இந்த ஆய்வை நியூ வேர்ல்டு வெல்த் நிறுவனம் நடத்தியுள்ளது.

## 9.2,000 சிசி திறனுக்கு மேலான டீசல் கார்களுக்கு டெல்லி அரசு அனுமதி

2,000 சிசி திறனுக்கு மேலான டீசல் கார்கள் மற்றும் எஸ்யுவி கார்களுக்கான பதிவை தொடங்குமாறு டெல்லி அரசு அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது. புதிதாக விற்பனை செய்யப்படும் கார்கள் அதன் விற்பனை விலையில் ஒரு சதவீதத்தை சுற்றுச்சூழல் பாதுகாப்பு வரியாக செலுத்த வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

Web2PDF
converted by Web2PDFConvert.com

தலைநகர் டெல்லியில் 2,000 சிசி திறனுக்கு மேலான டீசல் கார்கள் மற்றும் எஸ்யுவி ரக கார்கள் விற்பனை மீதிருந்த தடையை உச்ச நீதிமன்றம் ஆகஸ்ட் 12-ம் தேதி நீக்கியது. மேலும் புதிதாக விற்பனை செய்யப்படும் கார்கள் அதன் விற்பனை விலையில் ஒரு சதவீதத்தை சுற்றுச்சூழல் பாது காப்பு வரியாக செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் டெல்லி அரசினுடைய போக்குவரத்து துறை இந்த உத்தரவை அனைத்து பிராந்திய போக்குவரத்து அதிகாரிகளுக்கும் அனுப்பியது. 2,000 சிசி திறனுக்கு மேலான டீசல் கார்களைப் பதிவு செய்யுமாறும், ஒரு சதவீத சுற்றுச்சூழல் பாதுகாப்பு வரி செலுத்தப்பட்டதை உறுதி செய்த பின்னரே பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

மேலும் மெர்சிடஸ் பென்ஸ், டொயோடா, பிஎம்டபிள்யூ, ஆடி மற்றும் பிற சொகுசு கார் தயாரிப்பு நிறுவனங்கள் 2,000 சிசி திறனுக்கு மேலான டீசல் கார்களை விற்பதற்காக சூழல் உருவாகி உள்ளதாக இந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 10.குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு தேசிய விருது: சேலம் நிறுவனத்துக்கு முதல் பரிசு

மத்திய அரசின் 2013 மற்றும் 2014-ம் ஆண்டுக்கான சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான (எம்எஸ்எம்இ) தேசிய விருதுகள் பட்டியல் வெளியாகியுள்ளது. இதில் சேலம் மாவட்டம் மல்லூரை சேர்ந்த ஏரோ ஸ்பேஸ் இன்ஜினீயர்ஸ் நிறுவனத்துக்கு முதல் பரிசு அறிவிக்கப்பட் டுள்ளது.

தற்போது 2013 மற்றும் 2014-ம் ஆண்டுக்கான சிறந்த நிறுவனங்களை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

விருதுகளை செப்டம்பர் மாதம் லூதியானாவில் நடை பெற உள்ள விழாவில் பிரதமர் நரேந்திர மோடி வழங்க உள்ளார். மொத்தம் 70 விருதுகளை அளிக்க உள்ளார்.

2014-ம் ஆண்டின் தரமான உற்பத்திக்கான விருதுக்கு மசாலா பொடிகள் தயாரிக்கும் ஈரோட்டை சேர்ந்த ஈட்மேன் புட்ஸ் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சிறந்த தொழில்முனைவுக்கான 2013-ம் ஆண்டு தேசிய விருதின் இரண்டாவது பரிசு தமிழகத்தின் கரூரை சேர்ந்த மஞ்சு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் பெற உள்ளது.

கயிறு உற்பத்தியில் சிறந்த பெண் தொழில்முனைவோருக் கான விருது வாடிப்பட்டியை சேர்ந்த கேடிஎஸ் காயர் பார்ம்ஸ் உரிமையாளர் எஸ்.கவிதாவுக் கும், சிறந்த இளம், கயிறு தொழில் முனைவோர் விருது பொள்ளாச்சி எஸ்.எஸ்.எஸ்.குளோபல் உரிமையாளர் கே.சுரேஷ் குமாருக்கு கிடைத்துள்ளது.

### 11.எஃப்ஐஆர் பதிவான 48 மணி நேரத்தில் இணையத்தில் பதிய வேண்டும்: உச்ச நீதிமன்றம் உத்தரவு

எஃப்ஐஆர் பதிவு செய்யப்பட்ட 48 மணி நேரத்தில் அது குறித்த தகவல்கள் இணையதளத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் இன்று அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது. எஃஐஆர் பதிவு செய்யப்படுவது குறித்த வழக்கில் இன்று வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது.

அதாவது, காவல்நிலையங்களில் எந்த ஒரு சம்பவம் குறித்தும் எஃப்ஐஆர் பதிவு செய்யப்பட்டால், அதில் இருந்து 48 மணி நேரத்தில் வழக்கு விவரங்கள் இணையதளத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். மிக முக்கிய வழக்கு விவரங்களை பதிவு செய்ய 72 மணி நேரம் கால அவகாசம் வழங்கப்படும். வழக்கோடு தொடர்புடைய காவல்நிலைய இணையதளத்தில் எஃப்ஐஆர் பதிவுகள் உடனுக்குடன் பதிவிட வேண்டும்.

Shanmugam IAS Study Circle

பயங்கரவாதம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான பலாத்கார வழக்குகளுக்கு மட்டும் இந்த உத்தரவில் இருந்து விலக்கு அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்த உத்தரவை அனைத்து மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

### 12.ஃபெடரரின் சாதனையை முறியடித்தார் செரீனா

கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளில் அதிக வெற்றிகள் பெற்றிருந்த ரோஜர் ஃபெடரரின் சாதனையை முறியடித்தார் உலகின் முதல் நிலை வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ்.

அமெரிக்க ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டி நியூயார்க்கில் நடைபெற்று வருகிறது. 8-ஆவது நாளான திங்கள்கிழமை 4-ஆவது சுற்றுக்கான ஆட்டங்கள் நடைபெற்றன. மகளிர் பிரிவில், செரீனா வில்லியம்ஸ், கஜகஸ்தானின் யாராஸ்லாவா ஷிவிடோவாவை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் சுமார் 126 மைல் வேகத்தில் சர்வ் செய்த செரீனா, 11 ஏஸ் சர்வீஸ்களையும் வீசினார். இதில், தாக்குபிடிக்க முடியாத ஷிவிடோவா 2-6, 3-6 என்ற செட் கணக்கில் செரீனாவிடம் சரணடைந்தார்.

**புதிய சாதனை:** இது, செரீனாவுக்கு கிராண்ட் ஸ்லாம் போட்டியில் 308-ஆவது வெற்றியாகும். இதன் மூலம் புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார். அதாவது, கடந்த 1968-ஆம் ஆண்டு, ஓபன் எரா (தொழில் முறை வீரர்களுடன் அமெச்சூர் வீரர்களும் மோதுவது) முறை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் அதிக வெற்றிகளை பெற்றவர்கள் வரிசையில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் 307 போட்டிகளில் வெற்றி பெற்று முதலிடத்தில் இருந்தார்.

தற்போது, செரீனா, அவரது சாதனையை தகர்த்துள்ளார். மகளிர் பிரிவில் இந்த வரிசையில், மார்ட்டினா நவரத்லோவா 306 வெற்றிகளை பெற்றிருந்தார். அதனை இருதினங்களுக்கு முன்பு செரீனா முறியடித்திருந்தார். செரீனா தனது காலிறுதி சுற்றில், ருமேனியாவின் சிமோனா ஹாலேப்புடன் மோதுகிறார்.

**நினைத்துக் கூட பார்த்ததில்லை:**

கடந்த ஆகஸ்ட் 8-ஆம் தேதி ரோஜர் ஃபெடரர் 35-ஆவது பிறந்தநாளை கொண்டாடினார். செரீனா, வரும் 26-ஆம் தேதிதான் 35-ஆவது அகவையில் அடியெடுத்து வைக்கிறார்.

Web2PDF
converted by Web2PDFConvert.com

இது குறித்து செரீனா கூறுகையில், "நான் இவ்வளவு நாள்கள் விளையாடுவேன் என்று நிச்சயமாக நினைத்துகூட பார்க்கவில்லை. எப்போது ஓய்வு பெறுவேன் என்பது பற்றி நான் சிந்திக்கப்போவதில்லை. ஏனெனில், இந்த தருணங்களை, மகிழ்ச்சியாக உணர்கிறேன். சாதனைகள் இருக்கின்றன. அவற்றை முறியடிக்க வேண்டும் என்று நான் நினைத்தது கிடையாது' என்றார்.

கடந்த 1998-ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் தேதி ஆஸ்திரேலிய ஓபன் முதல் சுற்றில் செரீனா, தனது கிராண்ட் ஸ்லாம் போட்டியின் முதல் வெற்றியை பெற்றார். அப்போது அவருக்கு வயது 16. அந்த ஆட்டத்தில் அவர் ருமேனியாவின் இரினா ஸ்பிர்லியாவை 6-7 (5-7), 6-3, 6-1 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.

**வெற்றி-தோல்வி விகிதம்:**

கிராண்ட் ஸ்லாம் போட்டியில் செரீனா, 308 வெற்றியும், 42 தோல்வியும் கண்டிருக்கிறார். ஃபெடரரோ, 307 ஆட்டங்களில் வெற்றியும், 51 ஆட்டங்களில் தோல்வியையும் எதிர்கொண்டிருக்கிறார்.

வலது முழங்காலில் செய்யப்பட்ட அறுவை சிகிச்சை காரணமாக ஃபெடரர் ஓய்வெடுத்து வருகிறார். இதனால், அவர் அமெரிக்க ஓபன் போட்டியில் பங்கேற்வில்லை. எனவே, அடுத்த சீசனிலிருந்துதான் ஃபெடரர் தனது வெற்றி கணக்கை அதிகப்படுத்த முடியும்.

**கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் செரீனாவின் வெற்றி எண்ணிக்கை**

ஆஸ்திரேலிய ஓபன் 74

பிரெஞ்சு ஓபன் 60

விம்பிள்டன் 86

அமெரிக்க ஓபன் 88

மொத்தம் 308

## 13.இலங்கையுடன் டி-20 கிரிக்கெட்: உலக சாதனையுடன் ஆஸ்திரேலியா வெற்றி

இலங்கைக்கு எதிரான டி-20 கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 263 ரன்களை விளாசி புதிய உலக சாதனையை நிகழ்த்தியுள்ளது.

இலங்கை - ஆஸ்திரேலியா இடையிலான இருபோட்டிகள் கொண்ட டி-20 தொடரின் முதல் போட்டி இலங்கையின் பல்லகெல்லேவில் செவ்வாயக்கிழமை நடைபெற்றது. இதில், ஆஸ்திரேலிய அணி முதலில் பேட்டிங் செய்தது. அதிரடி ஆட்டக்காரரான கிளென் மேக்ஸ்வெல்லின் பவுண்டரி, சிக்ஸர் மாயாஜாலத்தால் காண்போருக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. இதேபோல் டிராவிஸ் ஹெட்டும் வெளுத்து வாங்கினார். இருவரையும் கட்டுப்படுத்த முடியாமல் இலங்கை பந்துவீச்சாளர்கள் திணறினர். 1, 7, 8 ஆகிய மூன்று ஓவர்களை தவிர மற்ற அனைத்து ஓவர்களிலும் 10 ரன்களுக்கு மேல் ஆஸ்திரேலிய வீரர்கள் விளாசினர்.

20 ஓவர்கள் முடிவில், ஆஸ்திரேலிய அணி 3 விக்கெட் இழப்புக்கு 263 ரன்களை குவித்தது. இதன் மூலம் அந்த அணி புதிய உலக சாதனையை நிகழ்த்தியுள்ளது. அதாவது இதற்கு முன்னர் 2007-ஆம் ஆண்டு கென்யாவுக்கு எதிராக இலங்கை அணி, 6 விக்கெட் இழப்புக்கு 260 ரன்கள் எடுத்திருந்ததே டி-20 கிரிக்கெட்டில் ஓர் அணியின் அதிகபட்ச ஸ்கோராக இருந்தது.

Shanmugam IAS Study Circle

மேக்ஸ்வெல் 65 பந்துகளில், 14 பவுண்டரி, 9 சிக்ஸர் உள்பட 145 ரன்களை விளாசினார்.

இது தனிநபர் அதிகபட்ச ரன்கள் வரிசையில் 2-ஆவது மிகப்பெரிய ஸ்கோர் ஆகும். இந்த வகையில், முதலிடத்தில் இருப்பவரும் ஆஸ்திரேலிய வீரர் தான். 2013-இல் இங்கிலாந்துக்கு எதிரான டி-20 ஆட்டத்தில் ஆரோன் பின்ச் 63 பந்துகளில் 156 ரன்கள் விளாசி முதலிடத்தில் உள்ளார். தற்போதைய ஆட்டத்தில் மேக்ஸ்வெல் தவிர, டிராவிஸ் ஹெட் 45 ரன்களும் (18 பந்து, 4 பவுண்டரி, 3 சிக்ஸர்) உஸ்மான் கவாஜா 36 ரன்களும் விளாசினர். எதிரணியில் பெரேரா, லக்மல் ஆகியோர் தலா 4 ஓவர்கள் வீசி, முறையே 58 ரன்களும், 51 ரன்களும் வாரி இறைத்தனர்.

இதைத் தொடர்ந்து இமாலய இலக்கை நோக்கி பேட்டிங் செய்த இலங்கை அணி, 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 178 ரன்களே எடுத்தது. இதன் மூலம் ஆஸ்திரேலிய அணி 85 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக கேப்டன் தினேஷ் சண்டிமால் 58 ரன்களும், சமாரா கபுகேத்ரா 43 ரன்களும் எடுத்தனர். ஆட்டநாயகனாக மேக்ஸ்வெல் தேர்வானார்.

## 14.சுஷில்குமார் உள்பட 3 பேர் பத்ம பூஷண் விருதுக்கு பரிந்துரை

ஒலிம்பிக்கில் இருமுறை பதக்கம் வென்ற மல்யுத்த வீரர் சுஷில் குமார் , உள்பட 3 பேரின் பெயர்களை, நாட்டின் மூன்றாவது உயரிய குடிமகனுக்கான பத்ம பூஷண் விருதுக்கு இந்திய மல்யுத்த சங்கம் (டபிள்யூ.எஃப்.ஐ) பரிந்துரை செய்துள்ளது.

Shanmugam IAS Study Circle

மல்யுத்த வீராங்கனை அகிலா தோமர், சுஷிலின் பயிற்சியாளர் யஷ்வீர் சிங் ஆகியோர் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள மற்ற இருவர் ஆவர். இந்தத் தகவலை டபிள்யூ.எஃப்.ஐ-இன் உதவி செயலாளர் வினோத் தோமர் தெரிவித்துள்ளார். சுஷில்குமார், கடந்த 2008 ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கமும், 2012-ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கமும் வென்றது குறிப்பிடத்தக்கது.

## 15.சென்னையில் தனது செயல்பாட்டை தொடங்கியுள்ளது எக்விடாஸ் சிறிய வங்கி

எக்விடாஸ் சிறிய நிதி வங்கி, சென்னையில் மூன்று கிளைகளுடன் முதல் முறையாக தனது செயல்பாட்டை தொடங்கியுள்ளது.

இதுகுறித்து எக்விடாஸ் சிறிய நிதி வங்கியின் நிர்வாக இயக்குநரும், தலைமைச் செயல் அதிகாரியுமான பி.என். வாசுதேவன் கூறியதாவது:

ரிசர்வ் வங்கியின் அனுமதி கிடைத்ததையடுத்து எக்விடாஸ் சிறிய நிதி வங்கி தனது செயல்பாட்டை தொடங்கியுள்ளது. சென்னையில் முதல் முதலாக மூன்று கிளைகளுடன்

Web2PDF
converted by Web2PDFConvert.com

வங்கி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரத்துக்கு பிறகு தமிழ்நாட்டிலிருந்து உருவான முதல் தனியார் துறை வங்கி என்ற பெருமை கிடைத்துள்ளது. வங்கி சேவையை பொருத்தவரையில் பொதுத்துறை வங்கிகளுக்கும், சிறிய நிதி வங்கிகளுக்கும் பெரிய அளவில் வேறுபாடு கிடையாது. இரண்டு வங்கிகளும் குறிப்பிட்ட இரண்டு விஷயங்களில் மட்டுமே வேறுபடுகின்றன.

சிறிய நிதி வங்கிகள் முன்னுரிமை துறைக்கு 75 சதவீத கடன்களை தர வேண்டும் என்ற விதிமுறை உள்ளது. அதேசமயம், பொதுத் துறை வங்கிகளில் இது 40 சதவீதமாக உள்ளது.

மேலும் சிறிய நிதி வங்கிகள் ரூ.25 லட்சம் வரையிலான கடன்களை 50 சதவீதம் வழங்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், பொதுத் துறை வங்கிகள் ரூ.25 லட்சத்துக்கும் மேலான கடன்களை 50 சதவீதம் வழங்க வேண்டும் என்ற விதிமுறை உள்ளது.

Shanmugam IAS Study Circle

சிறிய அளவில் நிதி உதவி தேவைப்படும் வாடிக்கையாளர்களை வசதியை கருத்தில் கொண்டே ரிசர்வ் வங்கி இத்தகைய விதிமுறைகளை வகுத்துள்ளது.

நிதி நிறுவனமாக செயல்பட்டு வந்த நிலையில் எக்விடாஸக்கு ஏற்கெனவே 26 லட்சம் வாடிக்கையாளர்கள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் வங்கிச் சேவை வழங்குவதை முதன்மையான குறிக்கோளாக கொண்டுள்ளோம்.

மேலும், எக்விடாஸ் ரூ.6,500 கோடி மதிப்பிலான கடன்களை வழங்கியுள்ளது. இதில், 50% நுண் கடனாகவும், 25 சதவீதம் பயன்படுத்தப்பட்ட வர்த்தக வாகனங்களுக்கான நிதி உதவியாகவும், எஞ்சியுள்ள தொகை குறு சிறு தொழில் நிறுவனங்கள் மற்றும் வீட்டு வசதி திட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டு இறுதிக்குள் நாடு தழுவிய அளவில் 11 மாநிலங்களில் 410 சிறிய நிதி வங்கி கிளைகளை அமைக்க திட்டமிட்டுள்ளோம். இதில், 50 சதவீதம் தென் மாநிலங்களிலும், 30 சதவீதம் மேற்கு மாநிலங்களிலும், 20 சதவீதம் வட மாநிலங்களிலும் அமைக்கப்பட உள்ளன.

குறிப்பாக தமிழகத்தில் மட்டும் 160 கிளைகளை தொடங்க திட்டமிட்டுள்ளோம். மேலும், சிறிய நிதி வங்கி கிளைகளில் வர்த்தக பிரதிநிதிகளை நியமனம் செய்து வாடிக்கையாளர்களின் இருப்பிடங்களுக்கே தேடிச் சென்று வங்கி சேவை அளிக்கத் திட்டமிட்டுள்ளோம் என்றார் அவர்.

## 16.பெங்களூரு ஐ.ஐ.எஸ்சி சர்வதேச தரவரிசையில் சரிவு

பெங்களூருவில் உள்ள ‘இண்டியன் இன்ஸ்டிடியூப் ஆப் சயின்ஸ் (ஐ.ஐ.எஸ்சி)’ இந்தியாவின் மிகச்சிறந்த பல்கலைக்கழகமாக நீடித்து வரும்போதிலும், சர்வதேச தரவரிசைப் பட்டியலில் 147-வது இடத்தில் இருந்து 152-வது இடத்துக்கு சரிந்துள்ளது.

தொழிலதிபர் ஜே.என்.டாட்டா, மத்திய அரசு மற்றும் மைசூரு மகாராஜாவின் கூட்டு முயற்சியால் 1909-ல் இந்தப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

கடந்த ஆண்டு, உலகின் மிகச்சிறந்த பல்கலைக்கழகங்கள் தரவரிசையில் ஐ.ஐ.எஸ்சி 147-வது ரேங்க் பெற்றது. மேலும் உலகின் சிறந்த 150 பல்கலைக்கழங்கங்கள் பட்டியலில் இடம்பெற்றது.

இந்தியாவில் மற்ற பல்கலைக் கழகங்கள், உலகின் சிறந்த 400 பல்கலைக்கழகங்கள் பட்டியலில் மட்டுமே இடம்பெற்றன. இந்நிலை யில் 2016-17-ம் ஆண்டுக்கான கியூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியல் நேற்று வெளியானது. இதில் பெங்களூரு ஐ.ஐ.எஸ்சி 152-வது இடத்துக்கு சரிந்துள்ளது. இந்த ஆண்டு கியூஎஸ் சர்வதேச தரவரிசையில், மசாசூசெட்ஸ் இன்ட்டிடியூட் ஆப் டெக்னாலஜி, ஸ்டான்போர்டு பல் கலைக்கழகம், ஹார்வர்டு பல் கலைக்கழகம் ஆகியவை முறையே முதல் 3 இடங்களை பிடித்துள்ளன.

## 17.ஸ்டெம் செல் ஊழல் குற்றச்சாட்டால் நோபல் தேர்வு குழுவிலிருந்து இருவர் நீக்கம்

ஸ்டெம் செல் ஊழல் குற்றச்சாட்டால் மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெறுபவர்களை தேர்தெடுக்கும் தேர்வு குழுவிலிருந்து இருவரை நீக்குவதாக நோபல் பரிசு குழு அறிவித்துள்ளது.

நீக்கம் செய்யப்பட்ட ஹாரியட் வால்பெர்க், ஆண்டெர்ஸ் ஹம்ஸ்டின் இருவரும் ஸ்வீடனை சேர்ந்த ஸ்டாக்ஹோம் கரோலின்ஸ்கா மருத்துவ பல்கலைகழகத்தை சேர்ந்தவர்கள்.

இது தொடர்பாக செவ்வாய்க்கிழமை நோபல் அமைப்பு குழுவின் செயலாளர் தாமஸ் பெர்ல்மன் ஸ்விடன் செய்தி நிறுவனத்திடம் கூறும்போது,

"ஹாரியட் வால்பெர்க், ஆண்டெர்ஸ் ஹம்ஸ்டின் இருவர் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளதால் இருவரையும் மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெறுபவர்களை தேர்தெடுக்கும் தேர்வு குழுவிலிருந்து விலகுமாறு கேட்டு கொள்ளப்பட்டுள்ளது" என்றார்.

ஹாரியட் வால்பெர்க், ஆண்டெர்ஸ் ஹம்ஸ்டின் இருவரும் ஸ்டாக்ஹோம் கரோலின்ஸ்கா பல்கலைகழகத்திலிருந்து இந்த ஊழல் குற்றச்சாட்டால் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 18.அரிய வகை மீனுக்கு ஒபாமாவின் பெயரை சூட்டிய விஞ்ஞானிகள்

ஹவாய் தீவுகளின் வடமேற்கு கடல் பரப்பில், கடல்வாழ் உயிரினங்களுக்கான பாதுகாக்கப் பட்ட பகுதி உள்ளது. பபஹனோ மோகுவாகி என்ற பெயரில் கடல்சார் தேசிய நினைவுச் சின்னமாக அமெரிக்கா பராமரித்து வரும், இந்த சர்வதேச பாரம்பரிய முக்கியவத்துவம் வாய்ந்த கடல்பகுதியை அதிபர் ஒபாமா அண்மையில் விரிவாக்கம் செய்வதாக அறிவித்தார்.

இதன் மூலம், மொத்தம் 5 லட்சத்து, 82 ஆயிரத்து 578 சதுர மைல்கள் பரப்புடன், உலகிலேயே மிகப் பெரிய கடல்வாழ்

Web2PDF
converted by Web2PDFConvert.com

உயிரனங்களின் பாதுகாக்கப்பட்ட பகுதியாக இது மாறியுள்ளது.

மிகப் பழமையான பவளப் பாறை கள் உள்ளிட்ட 7,000-க்கும் மேற்பட்ட அரிய வகை கடல்சார் உயிரினங்கள் மற்றும் கடல் வளங்களைக் கொண்ட இப்பகுதியை விரிவாக் கம் செய்ததற்கு நன்றியாக, அண்மையில் கண்டறியப்பட்ட அரிய வகை மீன் ஒன்றுக்கு ஒபாமா வின் பெயரை சூட்ட விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

குரே அட்டோல் கடல்பகுதியில், 300 அடி ஆழத்தில் கடந்த ஜூன் மாதம் கண்டறியப்பட்ட இந்த மீனின் உடலில் காணப்படும் வண்ண அமைப்பு, அதிபர் ஒபாமாவின் தேர்தல் பிரச்சார குறியீடு போலவே இருப்பதாக விஞ்ஞானிகள் கூறினர்.

ஏற்கெனவே 2002-ம் ஆண்டில் டென்னிசி ஆற்றில் கண்டறியப்பட்ட புதுவகை மீன் ஒன்றுக்கு ஒபாமாவின் பெயர் சூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**19.ஐசிசி ஒருநாள் போட்டி தரவரிசையில் விராட் கோலி 2-ம் இடம் தக்கவைப்பு**

ஐசிசி ஒருநாள் போட்டி பேட்டிங் தரவரிசையில் இந்திய நட்சத்திர வீரர் விராட் கோலி 2-ம் இடத்தை தக்க வைத்துள்ளார். ஆனால் ரோஹித் சர்மா ஒரு இடம் தாழ்ந்து 7-வது இடம் சென்றுள்ளார்.

தொடக்க வீரர் ஷிகர் தவண் 8-வது இடத்தைத் தக்க வைத்துள்ளார். இங்கிலாந்தின் ஜோ ரூட் முதல் முறையாக பேட்டிங் தரவரிசையில் முதல் 5 இடங்களுக்குள் நுழைந்து 4-வது இடத்திற்கு தாவியுள்ளார்.

ஜோ ரூட் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் 274 ரன்களை விளாசினார். இதனால் கேன் வில்லியம்சன், மார்டின் கப்தில், ரோஹித் சர்மா ஆகியோரை பின்னுக்குத்தள்ளி 4-வது நிலைக்குச் சென்றார்.

அதிரடி தொடக்க இங்கிலாந்து வீரர் அலெக்ஸ் ஹேல்ஸ் 4 இடங்கள் முன்னேறி 20-வது இடத்துக்கு முன்னேறியுள்ளார். 171 ரன்களை எடுத்து சாதனை படைத்ததையடுத்து அவருக்கு இந்த தரவரிசை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மற்றொரு தொடக்க வீரர் ஜேசன் ராய் 10 இடங்கள் முன்னேறி 35-வது இடம் பிடித்துள்ளார்.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை தரவரிசையில் அணியாக அடிமட்டத்திற்குச் சென்றாலும் விக்கெட் கீப்பர் சர்பராஸ் அகமட் தனது 55, 105, 38, 12, 90 ஆகிய ரன்களினால் 21 இடங்கள் முன்னேறி 39-வது இடத்திற்கு வந்துள்ளார்.

Shanmugam IAS Study Circle

அதே போல் இலங்கையுடன் மோதிய ஆஸ்திரேலிய அணி தொடரை 4-1 என்று கைப்பற்றியதில் பங்களித்த ஆரோன் பிஞ்ச் 15-வது இடத்திர்கும் ஜார்ஜ் பெய்லி 17-வது இடத்திற்கும் முன்னேறியுள்ளனர்.

பெய்லி இந்தத் தொடரில் 270 ரன்களை எடுத்தார். இதன் மூலம் தொடர் நாயகன் விருதையும் பெற்றார்.

தென் ஆப்பிரிக்க கிரேட் ஏ.பி.டிவில்லியர்ஸ் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார். விராட் கோலி 2-ம் இடத்திலும் ஹஷிம் ஆம்லா 3-ம் இடத்திலும் உள்ளனர்.

பவுலிங்கில் ஆஸ்திரேலியா வேகப்பந்து வீச்சாளர்களான மிட்செல் ஸ்டார்க், ஜேம்ஸ் பாக்னர், ஜான் ஹேஸ்டிங்ஸ் ஆகியோர் தரவரிசையில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளனர். சுனில் நரைன் தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறார். 2-ம் இடத்தில் டிரெண்ட் போல்ட் உள்ளார்.

அணிகளில் ஆஸ்திரேலியா முதலிடத்திலும் நியூஸிலாந்து 2-ம் இடத்திலும், இந்தியா 3-ம் இடத்திலும் இருக்கின்றன. பாகிஸ்தான் 9-ம் இடத்தில் உள்ளது. வெஸ்ட் இண்டீஸுக்கும் கீழ் உள்ளது பாகிஸ்தான்.

**20.பிரதமர் நரேந்திர மோதி, இந்திய ஆசியான் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள இன்று லாவோஸ் புறப்பட்டுச்சென்றார்.**

பிரதமர் நரேந்திர மோதி, இரண்டு நாள் பயணமாக, லாவோஸ்-க்கு , இன்று காலை புறப்பட்டார். லாவோஸ் தலைநகர் வியண்டைனில் 14-ஆவது ஆசியான் – இந்தியா உச்சிமாநாடு மற்றும் 11-ஆவது கிழக்காசிய உச்சி மாநாட்டிலும் அவர் கலந்துகொள்வார். இந்தபயணத்தில் ஜப்பான், தென்கொரியா, லாவோஸ் மற்றும் மியான்மர் நாட்டு தலைவர்களை சந்திப்பார். நாட்டின் வடகிழக்கு பகுதியின் பொருளாதாரவளர்ச்சிக்காக, இந்தியாவின் கிழக்கை நோக்கிய கொள்கையில், ஆசியான் முக்கியகூட்டாளி என்று பிரதமர் கூறியுள்ளார். இந்தியாவின் பாதுகாப்பு நலன்களை பாதுகாக்க, ஆசியானுடன் செயல்நோக்கு கூட்டாளித்துவம் முக்கியமானது என்று அவர் தமது முகநூல் பதிவில் கூறியுள்ளார். கிழக்காசிய உச்சி மாநாடு பற்றி குறிப்பிட்டபிரதமர், ஆசியா-பசிபிக் பகுதிகளின் சவால்கள் மற்றும் வாய்ப்புக்களை ஆராய்வதற்கான முதன்மையான அமைப்பு இது என்று கூறியுள்ளார். தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் இந்தியாவின் உறவு உண்மையில் வரலாற்று ரீதியிலானது என்றும், நாட்டின் ஈடுபாடு மற்றும் அணுகுமுறையை ஒரு வார்த்தையில் சொல்வதென்றால் அது தொடர்பு என்றும் கூறினார். இந்தபகுதியில், டிஜிட்டல் தொடர்பை மேம்படுத்தவும், மக்களுக்கு இடையிலான தொடர்பையும், அமைப்பு முறையை வலுப்படுத்தவும், இந்தியா விரும்புவதாக பிரதமர் கூறினார்.

**21.ஐந்து ஆண்டுகளுக்குள் ஆளில்லா லெவல் க்ராசிங், முற்றிலுமாக அகற்றப்படும் என, ரயில்வே துறை இணை அமைச்சர் ராஜென் கொஹைன் தெரிவித்துள்ளார்.**

ஐந்து ஆண்டுகளுக்குள் ஆளில்லா லெவல் க்ராசிங், முற்றிலுமாக அகற்றப்படும் என, ரயில்வே துறை இணை அமைச்சர் ராஜென் கொஹைன் தெரிவித்தார். அஸ்ஸாமில் உள்ள ஜோர்ஹாட்டில், செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மாதம் 12ம் தேதி முதல் இரட்டை ரயில் பாதை அமைக்கும் பணிகள் அஸ்ஸாமில் தொடங்கப்படும் என தெரிவித்தார். புதிய ஜல்பைகுரியிலிருந்து கௌஹாத்தி வரையில், ரயில் பாதையை மின்சார மயமாக்கும் பணி , விரைவில், 650 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். அரசு மற்றும் தனியார் கூட்டாளித்துவத்தில், கௌஹாத்தி உட்பட அஸ்ஸாமில் உள்ள பல ரயில் நிலையங்களின் தரம் மேம்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார். கௌஹாத்தி அருகே, அஜியாதுரியில் உலக தரம் வாய்ந்த ரயில் நிலையம் அமைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**22.2016 ஆம் ஆண்டின் ரியோ பாராலிம்பிக் போட்டிகள், இன்று தொடங்குகின்றன.**

Web2PDF
converted by Web2PDFConvert.com

Shanmugam IAS Study Circle




2016 பாராலிம்பிக் போட்டிகள் இன்று தொடங்குகிறது. 160திற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்துள்ள 4,350 விளையாட்டு வீரர்கள், 22 வகையான போட்டிகளில் கலந்து கொள்வார்கள். இதில் வீராங்கனைகளின் எண்ணிக்கை 1650 ஆகும். இந்தியாவில் இருந்து 18 விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் பங்கேற்க இந்த மாதம் 1 ஆம் தேதி ரியோவிற்கு புறப்பட்டு சென்றனர். விளையாட்டு வீரர்களுக்கு பிரதமர் நரேந்திர மோதி தமது வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டுள்ளார். இந்த விளையாட்டு வீரர்கள் தமது திறமையினால் நாட்டிற்கு பெருமை தேடித்தருவார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். விளையாட்டு போட்டிகள் இம்மாதம் 18ம் தேதி நிறைவடையும்.

## 23.புனிதர் பட்டம் வழங்கப்பட்டதை கௌரவிக்கும் வகையில் நினைவு தபால் தலை ஒன்றை இந்திய தபால் துறை வெளியிட்டுள்ளது.

அன்னை தெரஸாவுக்கு புனிதர் பட்டம் வழங்கியதை அடுத்து, புனிதர் பட்டம் வழங்கப்பட்டதை கௌரவிக்கும் வகையில் நினைவு தபால் தலை ஒன்றை இந்திய தபால் துறை வெளியிட்டுள்ளது. மும்பையில், பிஷப் Agnelo கிரேசியஸ், சகோதரி Rubella-வின் பங்கேற்ற நிகழ்ச்சியில், தகவல் தொடர்பு துறை இணை அமைச்சர் மனோஜ் சின்ஹா, இந்த தபால் தலையை வெளியிட்டார். இது ஓர் பெருமைப்படும் தருணம் என்றார் அவர். அன்னை தெரஸாவின் மனித குலத்திற்கான சேவைக்கு மரியாதையும், நன்றியும் தெரிவிக்கும் விதமாக, இந்த சிறப்பு தபால் தலை வெளியீட்டு நிகழ்ச்சி அமைந்துள்ளது என்றார் அமைச்சர்.

## 24.மத்திய பிரதேசத்தில் யுரேனியம் கண்டுபிடிப்பு

மத்திய பிரதேச மாநிலத்தில், உலகின் மிகவும் அரிதான அணு தாதுவான யுரேனியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த பகுதியில் ஆய்வுப் பணிகளை துவக்க, அணு தாது இயக்குனரகம் முடிவு செய்துள்ளது.

ம.பி., மாநிலத்தில், முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் தலைமையிலான பா.ஜ., ஆட்சி நடக்கிறது. இம்மாநிலத்தின், பைதாஹுல் பகுதியில் யுரேனியம் தாது இருப்பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. ஹோசங்காபாத் மாவட் டம், சத்புரா புலிகள் சரணாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள, பைதாஹுல் பகுதியில் ஆய்வு நடத்துவதற்கு, வடக்கு மண்டல வன பாதுகாப்பு துறை அனுமதி அளித்துள்ளது. இதையடுத்து, அந்த பகுதியில், 989 ஹெக்டேர் பரப்பளவில் யுரேனியம் எடுப்பதற்கு மாநில அரசின் அனுமதி கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக, அணு தாது இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

யுரேனியம் உற்பத்தி செய்யும் நாடுகளின் பட்டியலில், இந்தியா, 12வது இடத்தை பெற்றுள்ளது. உலகின் மொத்த யுரேனியம் இருப்பில், 3.54 சதவீத யுரேனியம் இந்தியாவில் உள்ளது. யுரேனியம், அணு சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய பயன்படுகிறது.

## 25.டால்கோ ரயில்: தில்லி - மும்பை 12 மணி நேர பயணம்

ஸ்பெயின் தயாரிப்பான "டால்கோ' அதிவேக ரயிலின் இறுதி சோதனை ஓட்டம், தில்லி - மும்பை இடையே நடைபெற்றது. தில்லியிலிருந்து மணிக்கு சுமார் 150 கி.மீ. வேகத்தில் இயக்கப்பட்ட "டால்கோ' ரயில், 12 மணி நேரத்துக்கு முன்பாகவே மும்பையை அடைந்தது. இந்த ரயிலின் முதல் சோதனை ஓட்டம், உத்தரப் பிரதேச மாநிலம் பரேலி - மொராதாபாத் இடையே நடைபெற்றது. பின்னர், பல்வல்-மதுரா இடையே 2-ஆவது சோதனை ஓட்டம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து, தில்லி - மும்பை இடையே மூன்று முறை சோதனை ஓட்டங்கள் நடைபெற்ற நிலையில், தற்போது நான்காவது மற்றும் இறுதி சோதனை ஓட்டமும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. தில்லியில் இருந்து இயக்கப்படும் ராஜதானி ரயில், 16 மணி நேரத்தில் மும்பையை அடைகிறது. டால்கோ ரயில் பயன்பாட்டுக்கு வரும்போது, தில்லியிலிருந்து மும்பையை 12 மணி நேரத்தில் அடைந்துவிடலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## 26.தில்லியில் செப். 14-இல் இந்திய-அமெரிக்க பொருளாதார உச்சி மாநாடு

இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையே வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவற்றை மேம்படுத்த தில்லியில் வரும் 14-ஆம் தேதி பொருளாதார உச்சி மாநாடு தொடங்குகிறது. இதுகுறித்து இந்திய- அமெரிக்க வர்த்தகக் கூட்டமைப்பு தெரிவிக்கையில், "இந்தியா, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கிடையே ஏற்கெனவே உள்ள இருதரப்பு வர்த்தகத்தை இந்திய மதிப்பில் சுமார் ரூ. 33 லட்சம் கோடிக்கு அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டிய துறைகளில் கவனம் செலுத்தப்படும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய- அமெரிக்க வர்த்தகக் கூட்டமைப்பின் வடக்கு இந்திய கவுன்சிலால் நடத்தப்படும் இந்த இரண்டு நாள் உச்சி மாநாட்டை இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் ரிச்சர்டு வர்மா தொடங்கி வைக்கிறார்.

மத்திய அமைச்சர்களான வெங்கய்ய நாயுடு, ஹர்சிம்ரத் கௌர் பாதல், இரு நாட்டு நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள், முக்கிய நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

## 27.நிதியமைச்சர் தலைமையில் ஜி.எஸ்.டி கவுன்சில்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்!

அண்மையில் நாடாளுமன்றத்தில் ஜி.எஸ்.டி மசோதா நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய நிதியமைச்சர் தலைமையில் ஜி.எஸ்.டி கவுன்சில் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதலை அளித்துள்ளது.

நாடெங்கும் ஒரே சீரான வரி விதிப்பு முறையை கொண்டுவரும் பொருட்டு 'பொருட்கள் மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) மசோதா' அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. பின்னர் ஜனாதிபதி பிரணாபிடம் இந்த மசோதா ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. அவரும் ஒப்புதல் அளித்துள்ள நிலையில், மறைமுக வரிவிதிப்பு அளவு மற்றும் ஜி.எஸ்.டி-ஐ அமல் செய்வதில் உள்ள பிரச்சினைகளை களையும் பொருட்டு ஜி.எஸ்.டி கவுன்சில் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி பிரதமர் மோடி தலைமையில் இன்று கூடிய மத்திய அமைச்சரவை கூட்டத்தில் இந்த கவுன்சில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. இது தொடர்பான அறிவிப்பும் அரசு கெசட்டில் வெளியிடப்பட்டது.

அமைச்சரவை கூட்டம் முடிந்ததும் மத்திய அரசின் செய்தி தொடர்பாளர் பிராங் நொரோன்ஹா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்த ஜி.எஸ்.டி கவுன்சிலில் மத்திய நிதி அமைச்சர், மத்திய வருவாய் துறை இணை அமைச்சர் மற்றும் மாநில நிதியமைச்சர் ஆகியோர் உறுப்பினர்களாக

Web2PDF
converted by Web2PDFConvert.com

இருப்பார்கள். சுருக்கமாக கூறுவதானால் மாநில நிதியமைச்சர்களின் உயர்மட்டக் குழு இந்த கவுன்சிலுக்கு உதவி புரியும்.

## 28.பாரா ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் தீபா மாலிக் வெள்ளிப்பதக்கம்

பிரேசிலின் பாரா ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் தீபா மாலிக் வெள்ளிப்பதக்கம் வென்றார். பிரேசிலின் ரியோவில் ஒலிம்பிக் போட்டிகளை தொடர்ந்து பாரா ஒலிம்பிக் போட்டிகள் நடக்கிறது. இதன் பெண்கள் குண்டு எறிதலில் இந்தியாவின் தீபா மாலிக் எப்.53 பிரிவில் பங்கேற்றார். இதில் 4.61 மீ., தூரம் வீசிய தீபா மாலிக் வெள்ளிப்பதக்கம் வென்றார். இதன்மூலம் பாராஒலிம்பிக் போட்டிகள் பதக்கம் வென்ற முதல் இந்தீய வீராங்கனை என்ற பெருமை பெற்றார் தீபா மாலிக்.

## 29.பாரா ஒலிம்பிக் நிறைவு விழாவில் கொடியேந்திச் செல்வது யார்?

பாரா ஒலிம்பிக் போட்டியின் நிறைவு விழாவில் இந்தியாவின் சார்பில் தமிழக வீரர் மாரியப்பன் தேசியக் கொடியேந்திச் செல்கிறார் எனத் தகவல்கள் வெளிவந்தன. ஆனால் இத்தகவலை இந்திய பாரா ஒலிம்பிக் கமிட்டி மறுத்துள்ளது.

பிரேசிலின் ரியோ டி ஜெனீரோவில் நடைபெற்று வரும் பாரா ஒலிம்பிக் போட்டியில் உயரம் தாண்டுதலில் தங்கம் வென்றதைத் தொடர்ந்து வரும் 18ம் தேதி நடைபெறும் நிறைவு விழாவில் கொடியேந்திச் செல்லும் கௌரவம் மாரியப்பனுக்கு கிடைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகின. ஆனால், இத்தகவலை இந்திய பாரா ஒலிம்பிக் கமிட்டி மறுத்துள்ளது.

Shanmugam IAS Study Circle

இதுதொடர்பான கமிட்டியின் முடிவு, 16 அல்லது 17-ம் தேதி அன்றுதான் வெளியிடப்படும் என்று அறிவித்துள்ளது. இன்னும் பல போட்டிகளில் இந்தியர்கள் பங்குபெற உள்ளதால், அதன் முடிவுகளுக்கு பிறகே நிறைவு விழாவில், தேசியக் கொடியேந்திச் செல்வது யார் என்பது தேர்வு செய்யப்படும் என இந்திய பாரா ஒலிம்பிக் கமிட்டி தெரிவித்துள்ளது.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவரான மாரியப்பன் 1.89 மீ. உயரம் தாண்டி தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

## 30.மலேரியா இல்லாத நாடு இலங்கை!

மலேரியா காய்ச்சல் முற்றிலும் ஒழிக்கப்பட்ட நாடு இலங்கை என்று உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவித்துள்ளது.
தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மாலத்தீவுகளுக்குப் பிறகு இத்தகைய சிறப்பை இலங்கை எட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. கொசுக்களின் மூலம் பரவும் மலேரியா காய்ச்சல், உலகம் முழுவதும் பரவலாக காணப்படும் நோயாக உள்ளது. கடந்த 1970, 80-ஆம் ஆண்டுகளில் இலங்கையின் பல பகுதிகளில் மலேரியாவின் தாக்கம் தீவிரமாக இருந்தது. அதன் பிறகு அந்நாட்டு அரசு மேற்கொண்ட பல்வேறு சுகாதார நடவடிக்கைகளின் காரணமாக மலேரியாவைப் பரப்பும் கொசுக்களின் உற்பத்தி படிப்படியாகக் குறைந்தது. இந்த நிலையில், மலேரியா காய்ச்சல் முற்றிலும் ஒழிக்கப்பட்ட நாடாக இலங்கை அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கருத்து தெரிவித்த உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய பிராந்திய இயக்குநர் டாக்டர் பூனம் கேத்ரபால் சிங், "இலங்கை நாட்டின் குறிப்பிடத்தக்க சாதனை இது' என்றார்.
உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் இந்தியா, நேபாளம், இந்தோனேசியா, வங்கதேசம், கொரியா உள்ளிட்ட 11 நாடுகள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

## 31.மெக்சிகோ நாட்டின் துணைத்தூதரகம் சென்னையில் துவக்கம்

மெக்சிகோ நாட்டின் துணைத்தூதரகம் சென்னையில் துவங்கப்பட்டுள்ளது. "சென்னையில் அமைக்கப்பட்டுள்ள மெக்சிகோ துணைத்தூதரகம் இந்தியா மற்றும் மெக்சிகோ நாடுகளுக்கு இடையிலான பொருளாதார மற்றும் கலாச்சார ஒத்துழைப்பை அதிகரிக்கும்.

மேலும் தென்னிந்தியாவிலிருந்து சுற்றுலா மற்றும் வியாபாரம் நிமித்தமாக மெக்சிகோ செல்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கவும் உதவும்."என இந்தியாவிற்கான மெக்சிகோ தூதர் மெல்பா பிரியா தெரிவித்துள்ளார்.

சென்னை நீலாங்கரையில் திறக்கப்பட்டுள்ள இந்த தூதகரத்தின் மூலமாக கர்நாடகா, தெலங்கானா, ஆந்திர பிரதேசம், கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பயன்பெறுவார்கள். எனினும் இந்த தூதரகத்தில் மெக்சிகோ செல்வதற்கான விசா வழங்கப்படாது.

மெக்சிகோ செல்ல விசா பெற விரும்புவோர் தில்லியில் உள்ள மெக்சிகோ தூதரகத்தை அணுக வேண்டும். மெக்சிகோ சார்பில் இந்தியாவில் அமைக்கப்படும் நான்காவது தூதரகம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## 32.சம்ஸ்கிருத மொழியில் ஐ.நா. சாசனம்

ஐ.நா. அமைப்பை உருவாக்குவதற்கான ஒப்பந்த சாசனம் சம்ஸ்கிருதத்தில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதுகுறித்து ஐ.நா.வுக்கான இந்தியத் தூதர் சையது அக்பருதீன் சுட்டுரை (டுவிட்டர்) வலைதளத்தில் தெரிவித்துள்ளதாவது:
ஐ.நா. சாசனம் தற்போது சம்ஸ்கிருத மொழியில் வெளியிடப்பட்டுள்ளது. இதற்காக அரும்பாடுபட்ட ஜிதேந்திர குமார் திரிபாதிக்கு நன்றிகள் என்று சையது அக்பருதீன் குறிப்பிட்டுள்ளார்.
ஜிதேந்திர குமார் திரிபாதி, லக்னௌவைச் சேர்ந்த அகில பாரதிய சம்ஸ்கிருத பரிஷதின் செயலர் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் சான் ஃபிரான்ஸிஸ்கோ நகரில், "சர்வதேச அமைப்பை உருவாக்குவதற்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு' கடந்த 1945-ஆம் ஆண்டு அக்டோபர் 24-ஆம் தேதி நடைபெற்றது. அதில், ஐ.நா. அமைப்பை உருவாக்குவதற்காக சர்வதேச நாடுகளிடையே ஏற்பட்ட ஒப்பந்தம், சாசனமாக இயற்றப்பட்டது.
இந்த சாசனம் இதுவரை ஐ.நா.வின் 6 அதிகாரப்பூர்வ மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருந்த நிலையில், தற்போது சம்ஸ்கிருதத்திலும் வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 33.ரியோ பாரா ஒலிம்பிக்: தமிழக வீரர் மாரியப்பன் தங்கம் வென்றார்

பிரேசிலின் ரியோ டி ஜெனீரோ நகரில் நடைபெற்று வரும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் (பாரா ஒலிம்பிக்), தமிழக வீரர் மாரியப்பன் (21) உயரம் தாண்டுதல் பிரிவில் உலக சாம்பியனை பின்னுக்குத்தள்ளி தங்கம் வென்று சாதனை படைத்தார். இதே பிரிவில் மற்றொரு இந்திய வீரரான வருண் சிங் வெண்கலப் பதக்கம் வென்றார்.
பாரா ஒலிம்பிக் போட்டியில் ஆடவர் உயரம் தாண்டுதல் பிரிவில் இந்தியர் ஒருவர் தங்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும்.
மாற்றுத்திறனாளி ஆடவருக்கான (டி-42 பிரிவு) உயரம் தாண்டுதல் போட்டியில் பங்கேற்ற மாரியப்பன், 1.89 மீ. உயரம் தாண்டி தங்கம் வென்றார். அமெரிக்காவைச் சேர்ந்த உலக சாம்பியனான சாம் க்ரு 1.86 மீ. உயரத்தை தாண்டி வெள்ளிப் பதக்கமும், இந்தியரான வருண் சிங்கும் அதே உயரம் தாண்டி வெண்கலமும் வென்றனர்.

Web2PDF
converted by Web2PDFConvert.com

இதே போட்டியில் பங்கேற்ற மற்றொரு இந்திய வீரர் சரத் குமார், 1.77 மீ. உயரம் தாண்டி 6-ஆவது இடத்தைப் பிடித்தார்.
முன்னதாக, இந்தப் போட்டியில் பங்கேற்ற 12 வீரர்களில் 6 பேர் தங்களது முதல் 8 முயற்சிகளிலேயே 1.74 மீ. உயரம் தாண்டியதால் கடும் போட்டி நிலவியது. எனினும், தனது 10-ஆவது முயற்சியில் வெற்றிகரமாக 1.77 மீ. உயரம் தாண்டிய மாரியப்பன், இறுதியில் 1.89 மீ. உயரம் தாண்டி வெற்றி பெற்றார்.
ரொக்கப் பரிசு: மத்திய விளையாட்டு அமைச்சகத்தின் ரொக்கப் பரிசு திட்டத்தின் கீழ், ரியோ பாரா ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற மாரியப்பனுக்கு ரூ.75 லட்சமும், வருண் சிங்குக்கு ரூ.30 லட்சமும் வழங்கப்பட உள்ளது.
பதக்கம் வென்ற மாரியப்பன், வருண் சிங் ஆகியோருக்கு நாடு முழுவதிலுமிருந்து பாராட்டுகளும்,பரிசுகளும் குவிந்தவண்ணமுள்ளன.

## 34.சுப்பிரமணியன் சுவாமிக்கு அமெரிக்காவில் தமிழ் ரத்னா விருது

பாஜக மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமிக்கு அமெரிக்க தமிழ்ச் சங்கம், "தமிழ் ரத்னா' என்ற விருதை வழங்கி கெü்ரவித்துள்ளது. தற்போது அமெரிக்கா வந்துள்ள மாநிலங்களவை எம்.பி.யான சுப்பிரமணியன் சுவாமி, ஊழலை எதிர்த்துப் போராடி வருவதற்காகவும், அரசின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மைக்காக தீவிரமாக செயலாற்றி வருவதற்காகவும் அவருக்கு "தமிழ் ரத்னா' விருது வழங்கி கெü்ரவிக்கப்பட்டுள்ளது.
அவரது பங்களிப்புகளை தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பிரகாஷ் எம். சுவாமி சுட்டிக் காட்டினார் என்று அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னதாக, ஆஸ்கர் விருது பெற்ற ஏ.ஆர். ரஹ்மான் மற்றும் திரைப்பட இயக்குநர் பாரதி ராஜா ஆகியோர் ஏற்கெனவே தமிழ் ரத்னா விருதைப் பெற்றுள்ளனர்.

## 35.சீனாவில் திறக்கப்பட உள்ள உலகின் மிக உயரமான பாலம்

தெற்கு சீனாவின் குய்ஸோ மாகாணத்தில் உலகின் மிக உயரமான பாலம் இந்த ஆண்டு இறுதியில் திறக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மலைப்பகுதிகள் நிரம்பிய சீனாவின் தெற்கு பகுதியில் அமைந்துள்ளது குய்ஸோ மாகாணம். இங்கே இரு மலைப்பகுதிகளில் நடுவே, ஆற்றுக்கு மேலாக கட்டப்பட்டுள்ளது பேய்ப்பன்ஜிங் பாலம். தரை மட்டத்தில் இருந்து 1854 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த பாலம் 1341 மீட்டர் நீளம் கொண்டது. இந்த பாலம்தான் தற்பொழுது உலகின் மிக உயரமான பாலமென்று கருதப்படுகிறது.

இந்த பாலத்தின் இரு முனைகளும் சனிக்கிழமையன்று இணைக்கப்பட்டன. இந்த வருட இறுதியில் போக்குவரத்திற்கு இந்தப் பாலம் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் லியூபாண்சுயி மற்றும் ஸுஅன்வெய் பகுதிகளுக்கு இடையேயான போக்குவரத்து நேரம் பாதியாக குறையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் உலகின் மிக உயரமான பாலங்களில் பெரும்பாலானவை சீனாவில்தான் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## 36.இந்தியாவின் உயரிய விருதுகள்

மத்திய அரசின் சார்பில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு பல விருதுகள்ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. இதில் மிகமுக்கியமானது 4 விருதுகள் தான். நாட்டின் மிகஉயரிய விருது என்ற பெருமை பெற்றது பாரத ரத்னா. இதற்கு அடுத்து பத்ம விபூஷண், பத்ம பூஷன், பத்ம ஸ்ரீ ஆகிய விருதுகள் உள்ளன. இதுவரை இந்த விருதுகளை எத்தனை பேர் பெற்றுள்ளனர்; எந்த மாநிலத்தில் இருந்து அதிகம் பேர் விருதுகளை பெற்றுள்ளனர்; பெண்கள் எத்தனை பேர் என்ற விபரங்கள் மத்திய அரசின்www.padmaawards.gov.in என்ற இணையளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
9 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களில் இவ்விருதை அதிகம் பெற்றவர்கள் டில்லி. இப்பட்டியலில்தமிழகம் 3வது இடத்தில் உள்ளது.

டாப் - 5
டில்லி - 797
மகாராஷ்டிரா - 756
தமிழகம் - 391
உ.பி., - 295
மே.வங்கம் - 263

**எந்த மாநிலம் கடைசி**

இப்பட்டியலில் லட்சத்தீவு கடைசி இடத்தில் உள்ளது. இங்கிருந்து ஒருவர் கூட விருது பெறவில்லை.
கடைசி 5 இடம்
புதுச்சேரி - 6
அருணாச்சல் - 5
திரிபுரா - 2
டாமன் டையூ - 1
லட்சத்தீவு - 0

**பெண்கள் எத்தனை**

விருது பெற்ற 4,329 பேரில், 12 சதவீதம் (519 பேர்) மட்டுமே பெண்கள்.

எந்த நாடு அதிகம்

இந்த விருதுகளை பெற்ற வெளிநாடுகளின் பட்டியலில்அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அந்நாட்டை சேர்ந்த 100 பேருக்குஇவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

**மொத்த விருது**

இதுவரை பாரத ரத்னா, பத்ம விபூஷண், பத்ம பூஷன் மற்றும்பத்ம ஸ்ரீ ஆகியவிருதுகளை பெற்றவர்களின் எண்ணிக்கை - 4,329 பேர்

Shanmugam IAS Study Circle

**பாரத ரத்னா**

உயரிய விருதான பாரத ரத்னா விருது 1954ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவ்விருதை இதுவரை 45 பேர் பெற்றுள்ளனர். கலை, இலக்கியம், சமூக சேவையில் சாதனை படைத்தவர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. தற்போது இது அனைத்து துறையிலும் சாதனை படைத்தவர்களுக்கு எனமாற்றப்பட்டுள்ளது.

**பத்ம விபூஷண்**

Web2PDF
converted by Web2PDFConvert.com

இது இந்தியாவின் 2வது உயரிய விருது. 1954ல் உருவாக்கப்பட்டது. இதுவரை293 பேருக்குவழங்கப்பட்டுள்ளது.

**பத்ம பூஷன்**

இது இந்தியாவின் 3வது உயரிய விருது. 1954ல் உருவாக்கப்பட்டது. இதுவரை 1,225 பேர் இவ்விருதைபெற்றுள்ளனர்.

**பத்ம ஸ்ரீ**

பாரத ரத்னா, பத்ம விபூஷண், பத்ம பூஷன் ஆகிய விருதுகளுக்கு அடுத்து 4வது உயரிய விருது பத்ம ஸ்ரீ.இது 1954ல் உருவாக்கப்பட்டது. இதுவரை 2,766 பேர் இவ்விருதை பெற்றுள்ளனர்.

**எந்த துறையினர் டாப்**

இந்த விருதுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் கலைத் துறையினர் முதலிடத்தில் உள்ளனர். இத்துறையை சேர்ந்த 930 பேர் இவ்விருதை பெற்றுள்ளனர்.

**துறை எண்ணிக்கை**

கலை - 930
இலக்கியம், கல்வி- 852
மருத்துவம் - 537
அறிவியல், இன்ஜினியரிங் - 492
சமூக சேவை - 419
சிவில் சர்வீஸ் - 417
பொது விவகாரம் - 227
விளையாட்டு - 211
வணிகம், தொழில் - 181
மற்றவர்கள் - 63

## 37.ஏவுகணை தாங்கி போர்க்கப்பல் தயாரித்து இந்தியா

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, அதிநவீன ஏவுகணைகள் பொருத்தக்கூடிய, பிரம்மாண்ட போர்க்கப்பல் துவக்கி வைக்கப்பட்டது. உலகின் சிறந்த போர்க்கப்பல்களுடன் ஒப்பிடக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள, இதற்கு, 'மர்மகோவா' என, பெயரிடப்பட்டுள்ளது.

கடற்படைக்கு தேவையான போர்க்கப்பல்களை இந்தியாவிலேயே தயாரிக்கும் திட்டப்படி, அரசால் நடத்தப்படும், எம்.டி.எல்., எனப்படும், 'மஸ்கவான் டாக் ஷிப்பில்டர்ஸ்' நிறுவனம், அதிநவீன போர்க்கப்பல்களை தயாரித்து வருகிறது.

இந்த நிறுவனம் தயாரித்துள்ள, இரண்டாவது பிரம்மாண்ட போர்க்கப்பலுக்கு, 'மர்மகோவா' என, பெயரிடப்பட்டுள்ளது.

மர்மகோவா கப்பலை துவக்கி வைக்கும் விழா, மஹாராஷ்டிர மாநில தலைநகர் மும்பையில் நேற்று நடந்தது. கடற்படை தளபதி, அட்மிரல் சுனில் லன்பாவின் மனைவி ரீனா, கப்பலை துவக்கி வைத்தார். அதையடுத்து, அரபிக் கடலில், மர்மகோவா கப்பல், முதல் முறையாக செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், சுனில் லன்பா பேசியதாவது: மத்திய அரசின், 'இந்தியாவில் தயாரியுங்கள்' திட்டத்தை நனவாக்கும் வகையில், உள்நாட்டிலேயே, பிரம்மாண்ட போர்க்கப்பல் தயாரிக்கப்பட்டுள்ளது. உலகின் சிறந்த போர்க்கப்பல்களுடன், இந்த கப்பலை ஒப்பிடும் வகையில், அதிநவீன அம்சங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

மர்மகோவா எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த கப்பல், இந்திய கடல் பகுதியை சிறப்பான வகையில் பாதுகாக்கும். டி.ஆர்.டி.ஓ., எனப்படும், ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து, கப்பலை வடிவமைத்தது. வருங்காலத்தில், இத்தகைய போர்க்கப்பல்கள் அதிகளவில் தயாரிக்கப்படும்.
எம்.டி.எல்., நிறுவனம், இந்தியாவில், நீர்மூழ்கிக் கப்பல் தயாரிக்கும், ஒரே நிறுவனமாக திகழ்கிறது. இவ்வாறு அவர் பேசினார்.

Shanmugam IAS Study Circle

'ரேடார்' மையம்:
* தரையிலிருந்து, தரையில் உள்ள இலக்கையும், தரையிலிருந்து, விண்ணில் உள்ள இலக்கையும் தாக்கும் ஏவுகணைகளை, இந்த கப்பலில் பொருத்த முடியும்
* இந்த கப்பலில்இருந்து பாய்ந்து செல்லும் ஏவுகணைகள், இலக்கை துல்லியமாக சென்றடைந்து தாக்கும் வகையிலானவை
* இஸ்ரேல் நாட்டின், 'எம்.எப் - ஸ்டார்' எனப்படும், அதிநவீன கண்காணிப்பு ரேடார் மையம், மர்மகோவாவில் பொருத்தப் பட்டுள்ளது
* கடல் பரப்பில், 300 கி.மீ., தொலைவுக்கு அப்பால் உள்ள இலக்கை, துல்லியமாக தாக்கவல்ல, 'பிரம்மோஸ்' சூப்பர்சானிக் ஏவுகணைகளும் இந்த கப்பலில் உள்ளன
* நீர்மூழ்கிக் கப்பலுக்கு எதிராக தாக்குதல் நடத்தக்கூடிய, இரண்டு ஹெலிகாப்டர்களை சுமந்து செல்லும் திறனும் இந்த கப்பலுக்கு உண்டு
* மர்மகோவா என்பது, கோவாவில் உள்ள பிரபலமான துறைமுகம் அமைந்துள்ள நகரத்தின் பெயர். உக்ரைன் நாட்டு இன்ஜின் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட போர்க்கப்பல்களில், தற்போதைய தயாரிப்பான மர்மகோவா மிக மோசமான அழிவுகளை ஏற்படுத்தவல்லது. இதை போன்று, மேலும் நான்கு போர்க்கப்பல்கள், 29 ஆயிரத்து, 700 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மர்மகோவா கப்பல், 535 அடி நீளம் உடையது. மணிக்கு, 56 கி.மீ., வேகத்தில் செல்லும். இதில், உக்ரைன் நாட்டில் தயாரிக்கப்பட்ட, நான்கு நவீன, 'காஸ் டர்பைன் இன்ஜின்'கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கப்பலில், 50 அதிகாரிகள், 250 மாலுமிகள் பணியாற்றுவர்.

## 38.சீனாவில் உருவானது உலகில் மிகப்பெரிய தொலைநோக்கி

சீனாவில் உலகிலேயே மிகப்பெரிய தொலைநோக்கி உருவாக்கும் பணிகள் முடிவடைந்துள்ளது. சீனாவில் கியூஹோ (Guizhou) பகுதியில் கடந்த 2011-ம் ஆண்டு உலகிலேயே மிக பெரிய தொலைநோக்கி உருவாக்கும் பணிகள் தொடங்கியது. பாஸ்ட் என பெயரிடப்பட்டுள்ள இந்த தொலைநோக்கி 1.6 கிலோ மீட்டர் சுற்றளவுடன் 2500 உலோக மேற்பரப்பு தளங்களால் ஆனது. மேலும் இந்த தளமானது 30 கால்பந்து மைதானத்திற்கு இணையானது. அதிநவீன தொழில்நுப்பத்துடன் அமைக்கப்பட்டுள்ள இந்த தொலைநோக்கியை கொண்டு 1000 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ள சிக்னல்களை எளிதாக பெற முடியும் என கூறப்படுகிறது.

Shanmugam IAS Study Circle

இந்திய மதிப்பில் 1,213 ரூபாய் கோடி செலவில் வடிவமைக்கப்பட்ட இந்த தொலைநோக்கி தற்போது செயல்பட்டுக்கு தயாராக உள்ளது. அண்ட பெரு வெடிப்பு பற்றிய பல புதிய தகவல்களை இதன் மூலம் அறியலாம் என வானவியல் ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## 39.2016-ம் ஆண்டுக்கான ஜப்பானின் புகுவோகா விருதை பெற்றார் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான்!

Web2PDF
converted by Web2PDFConvert.com

பிரபல இந்திய திரை இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானுக்கு ஜப்பானின் 2016ம் ஆண்டுக்கான புகுவோகா விருது வழங்கப்பட்டது. ஜப்பான் நாட்டின் புகுவோகா நகரில் யோகோபோடியா அமைப்பு 1990ம் ஆண்டு முதல் ஆசிய கலாசாரத்தை உருவாக்குபவர்கள் அல்லது பாதுகாப்பவர்களுக்கு கிராண்ட், அகாடமிக், கலை மற்றும் கலாசாரம் என்ற 3 பிரிவுகளில் விருதுகளை வழங்கி வருகிறது. இசைத்துறையில் செய்த சேவையை பாராட்டி, 2016ம் ஆண்டிற்கான புகுவோகா விருது கிராண்ட் பிரிவில் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு வழங்கப்பட்டது.

Shanmugam IAS Study Circle

அகாடமிக் பிரிப்பில் பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்த அமீத் அக்கம்போவுக்கு வழங்கப்பட்டது. கலை மற்றும் கலாசார பிரிவில் பாகிஸ்தானை சேர்ந்த கட்டிட கலை நிபுணர் யாஸ்மின் லாரிக்கு வழங்கப்பட்டது. சிதார் இசைக்கலைஞர் ரவி சங்கர், பரத நடன கலைஞர் பத்மா சுப்ரமணியம், வரலாற்று ஆய்வாளர் ரோமிலா தாபார், இசைக் கலைஞர் அஜ்மத் அலி கான், சமூக மற்றும் கலாசாரத்துறையில் ஆசிஸ் நந்தி, அரசியல் அறிவியல், வரலாற்று துறை அறிஞர் பார்த்தா சாட்டர்ஜி, சுற்றுச்சூழல் ஆய்வாளர் வந்தன ஷிவா, ஓவியக்கலைஞர் நளினி மாலினி, வரலாற்று ஆசிரியர் ராமச்சந்திரா குகா ஆகியோர் ஏற்கெனவே இந்த விருதை பெற்றுள்ளனர்.

## 40.ஆதார் தகவல்களை தவறாக பயன்படுத்தக் கூடாது

ஆதார் அட்டை தகவல்கள் எதற்காக பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும், அந்தத் தகவல் களை தவறாகப்பயன்படுத்தக் கூடாது என்று ஆதார் சட்டத்தில் புதிய விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை நேற்றுமுன் தினம் அரசாணையாக வெளியிடப்பட்டன. கடந்த மார்ச் 16-ம் தேதி ஆதார் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமானது. இதைத் தொடர்ந்து மார்ச் 26-ல் அரசிதழில் வெளியிடப்பட்டது.

ஆதார் சட்ட விதிகளை மீறுவோருக்கு ஓராண்டு முதல் 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் ரூ.10 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை அபராதமும் விதிக்க சட்டத்தில் விதிகள் உள்ளன. எனினும் ஆதார் அட்டை திட்டத்தில் குளறுபடிகள் இருப்பதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டினர். ஆதார் அட்டைக்காக பெறப்பட்ட தகவல்கள் வேறு அமைப்புகளுக்கு கைமாறும் வாய்ப்புள்ளது. தனிநபர்களின் அந்தரங்கம் வெளிச்சத்துக்கு வரும் ஆபத்துள்ளது என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தக் குறைகளைப் போக்கும் ஆதார் சட்டத்தில் புதிய விதிகள் சேர்க்கப்பட்டு நேற்றுமுன்தினம் அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி அரசு, தனியார் அமைப்புகள் பொதுமக்களின் ஆதார் தகவல்களைப் பெறும்போது சம்பந்தப்பட்ட நபர்களின் ஒப்புதலை கண்டிப்பாகப் பெற வேண்டும். அந்த தகவல்கள் எதற்காகப் பயன்படுத்தப்பட உள்ளன என்பது குறித்து அட்டைதாரரிடம் விளக்கம் அளிக்க வேண்டும். வேறு எந்த பணிக்கும் அந்த தகவல்களைப் பயன்படுத்தக்கூடாது என்று புதிய விதிகளில் கூறப்பட்டுள்ளது.

'ஆதார் தகவல்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுப்பது, பொது மக்களின் அந்தரங்கத்தைப் பாதுகாப்பது ஆகியவற்றின் அடிப்படையில் புதிய விதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும் பொதுமக்கள் தங்கள் குறைகளை தெரிவிக்க ஏதுவாக புகார் மையம் தொடங்கப்படும்' என்று ஒருங்கிணைந்த அடையாள திட்ட ஆணைய (யு.ஐ.டி.ஏ.ஐ.) தலைமை நிர்வாக அதிகாரி அஜய்பூஷண் பாண்டே தெரிவித்துள்ளார்.

## 41.ஐ.நா. நல்லெண்ண தூதர்

ஆள் கடத்தலால் பாதிக்கப்பட்டோருக்கான, ஐநாவின் நல்லெண்ணத் தூதராக, இராக்கைச் சேர்ந்த இளம்பெண் நாடியா முராத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இராக்கின் வடக்குப் பகுதியில் சிஞ்சார் நகருக்கு அருகே உள்ள கிராமத்தின் யசீதி இனத் தைச் சேர்ந்த நாடியா முராத் பாஸீ தாஹா (23), 2014-ம் ஆண்டு இராக்கில் ஐஎஸ் தீவிர வாதிகளால் பாலியல் அடிமையாக கடத்தப்பட்டு, பல்வேறு சித்ரவதைகளுக்கு ஆளானவர். இவருடன் சேர்த்து கடத்தப் பட்ட ஏராளமான சிறுவர்களை, தீவிரவாதிகள் இவரின் கண் முன்னாலேயே சுட்டுக்கொன்று ரத்த வெள்ளத்தில் மிதக்கச் செய்துள்ளனர். தீவிரவாத கும்பலால் பல முறை பாலியல் அடிமையாக விலை பேசி விற்கப்பட்டுள்ளார்.

வார்த்தைகளால் விவரிக்க முடியாத பலவிதமான கொடுமைகளை அனுபவித்து, உயிர் தப்பி வந்திருக்கும் இவரை, ஆள் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்லெண்ணத் தூதராக ஐநாவின் குற்றம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு அலுவலகம் நியமித்துள்ளது.

தீவிரவாதிகளால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தாலும், அஞ்சி அடங்கிவிடாமல், அவர்களுக்கு எதிராக குரல் கொடுப்பதோடு, தன்னைப் போன்று பாலியல் அடிமைகளாக சிக்கியவர்களை மீட்க, துணிச்சலுடன் போராட முன்வந்ததால், அவருக்கு இந்த கவுரவம் வழங்கப்பட்டதாக, ஐநா பொதுச் செயலாளர் பான் கி மூன் தெரிவித்தார். தீவிரவாதிகளின் கோரப்பிடியில் சிக்கி உயிர் தப்பிய ஒருவருக்கு ஐநாவில் இதுபோன்ற பதவி வழங்கப்படுவது இதுவே முதல்முறை. யசீதி இனப் படுகொலைக்கு எதிராகவும் நாடியா முராத் போராடி வருகிறார். அமைதிக்கான நோபல் பரிசுக்கும் இவரின் பெயர் பரிசீலிக்கப்படுகிறது.

## 42.அமெரிக்க அருங்காட்சியகத்தில் தங்க கழிவறை

அமெரிக்காவில் உள்ள அருங்காட்சியகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 18 கேரட் தங்க கழிவறை பொது பயன்பாட்டுக்காக திறந்துவிடப்பட்டுள்ளது. அந்த கழிவறையை காண்பதற்காகதற் போது அருங்காட்சியகத்தில் கூட்டம் அலைமோதுவதாக கூறப்படுகிறது.

நியூயார்க் நகரில் ககன்ஹேம் அருங்காட்சியகம் உள்ளது. இதன் நான்காவது மாடியில் உள்ள பொது கழிவறையில், வழக்கமான கழிவறை நீக்கப்பட்டு 18 கேரட் தங்கத்தில் உருவாக்கப்பட்ட கழிவறை சில மாதங்களுக்கு முன் நிறுவப்பட்டது. இத்தாலிய கலைஞர் மவுரிசியோ கேட்டலன் பணியில் இருந்து ஓய்வு பெறும் முன் தனது இறுதி படைப்பாக இதனை உருவாக்கியிருந்தார். கழிவறை நிர்மாணிக்கப்பட்டதும் அதனை பார்வையிடுவதற்கு மட்டும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். இந்த சூழலில் இந்த கழிவறையை பொதுபயன்பாட்டுக்கும் அருங்காட்சியகம் திறந்துவிட்டுள்ளது. இதனால் அருங்காட்சியகத்துக்கு வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக கூறப்படுகிறது.

கழிவறை கதவுக்கு வெளியே பாதுகாவலர் ஒருவர் நிறுத்தப்பட்டுள்ளார். இதை பயன்படுத்துபவர் யாரேனும் தங்கத்தை சேதப்படுத்தி எடுத்துச் செல்ல முயற்சிக்கிறார்களா என்பதை அவர் கவனித்துக் கொள்கிறார்.

## 43.சீனாவின் 2-வது விண்வெளி ஆய்வுக் கூடம்

சீனாவின் 2-வது விண்வெளி ஆய்வுக்கூடம் விண்வெளியில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2011 செப்டம்பரில் தியன்கோங்-1 என்ற விண்வெளி ஆய்வுக்கூடத்தை சீனா விண்ணில் செலுத்தியது. அந்த ஆய்வு கூடத்தில் 2012 ஜூன், 2013 ஜூனில் சீன விண்வெளி வீரர்கள் 8 நாட்கள் மற்றும் 12 நாட்கள் தங்கியிருந்துவிட்டு பூமிக்கு திரும்பினர். அதன் ஆயுட்காலம் கடந்த மார்ச் மாதம் நிறைவடைந்தது. அது அடுத்த ஆண்டு பிற்பகுதியில் பூமியில் விழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து தியன்கோங்-2 என்ற விண்வெளி ஆய்வுக் கூடத்தை சீன விண்வெளி ஆய்வு மையம் நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. ஜியுகுவான் விண்வெளி மையத்தில் இருந்து 'மார்ச் 2எப்' என்ற ராக்கெட் மூலம்

Web2PDF
converted by Web2PDFConvert.com

விண்ணில் ஏவப்பட்ட அந்த விண்வெளி ஆய்வுக் கூடம் பூமியில் இருந்து 393 கி.மீட்டர் தொலைவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

அந்த ஆய்வுக் கூடத்துக்கு வரும் அக்டோபரில் 2 விண்வெளி வீரர்கள் அனுப்பப்பட உள்ளனர். அவர்கள் தியான்கோங்-2 ஆய்வு கூடத்தில் 30 நாட்கள் தங்கியிருந்து பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உள்ளனர்.

சீன விண்வெளி வீரர்கள் விண்வெளிக்கு சென்றுவிட்டு பூமிக்கு பத்திரமாக திரும்ப ஏதுவாக புதிய விண்கலத்தை அந்த நாடு ஏற்கெனவே தயார் நிலையில் வைத்துள்ளது. 'மார்ச் 7' என்று பெயரிடப்பட்டுள்ள அந்த விண்கலம் கடந்த ஜூனில் ஆட்கள் இல்லாமல் விண்வெளி சென்றுவிட்டு பத்திரமாக பூமிக்கு திரும்பியது. அதில்தான் சீன விண்வெளி வீரர்கள் தியன்கோங் 2 ஆய்வு கூடத்துக்கு அனுப்பப்பட உள்ளனர். அடுத்த கட்டமாக வரும் 2022-ம் ஆண்டில் விண்வெளியில் நிரந்தர ஆய்வுக் கூடத்தை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.

### 44.இந்திய வம்சாவளி அமெரிக்கருக்கு விருது

இந்திய வம்சாவளி மருத்துவர்-எழுத்தாளர் ஆப்ரஹாம் வர்கீஸுக்கு 2015-ம் ஆண்டுக்கான தேசிய மனிதநேய பதக்கத்தை வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. வரும் 21-ம் தேதி நடைபெறும் விருது வழங்கும் விழாவில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா வர்கீஸ் மற்றும் 11 பேருக்கு இவ்விருதை வழங்குவார்.

மருத்துவத்துறையில் அவர் ஆற்றிய பணிக்காக வர்கீஸுக்கு இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது. ஆப்ரஹாம்வர்கீஸ் (61), தற்போது ஸ்டான்ட் போர்டு மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராகவும் மருந்துகள் துறையின் துணைத்தலைவராகவும் உள்ளார். இவர் தனது மருத்துவக் கல்வியை மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியில் பயின்றார்.

"நோயாளிகள்தான் மருத்துவ உலகின் மையம் என்பதை வர்கீஸ் நமக்கு நினைவுபடுத்தியுள்ளார்" என வெள்ளைமாளிகை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1997-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய மனிதநேய பதக்கம் வரலாறு, இலக்கியம், மொழி, தத்துவம், இதர மனிதநேய பணிகளில் ஈடுபடும் தனிமனிதர்கள், குழுக்களுக்கு வழங்கப்படுகிறது.

### 45.உலகளவில் அதிக வருவாய் ஈட்டும் டிவி நடிகைகள் பட்டியலில் பிரியங்கா சோப்ரா

உலகிலேயே அதிகம் சம்பளம் பெறும் சின்னத்திரை நடிகைகள் பட்டியலை ஃபோர்ப்ஸ் இதழ் வெளியிட்டது. இதில் இந்தியாவின் பிரியங்கா சோப்ராவும் இடப்பெற்றுள்ளார்.

"குவாண்டிகோ" என்ற அமெரிக்க டிவி தொடரில் நடித்ததன் மூலம் பிரியங்காவுக்கு இந்த பட்டியலில் இடம் கிடைத்துள்ளது. அதுமட்டுமில்லாது இந்தியாவிலிருந்து இந்த பட்டியலில் இடப்பெற்றுள்ள முதல் நடிகையும் பிரியங்காதான்.

'குவாண்டிகோ" டிவி தொடரில் நடித்ததன் மூலம் பிரியங்கா பெற்ற வருமானம் 1கோடியே 10 லட்சம் அமெரிக்க டாலர்கள் ஆகும்.

இந்த பட்டியலில் அமெரிக்காவின் சோபியா வெர்கரா முதல் இடம் பிடித்துள்ளார். அவரது வருமானம் 4.4கோடி அமெரிக்க டாலர்கள் ஆகும். தொடர்ந்து ஐந்தாவது முறையாக இந்த பட்டியலில் முதலிடம் பிடித்து வருகிறார் சோபியா.

இதற்கு முன்னர் ஃபோர்ப்ஸ் பத்திரிக்கை இந்தியாவில் விளம்பர படங்கள் மூலம் அதிகம் வருமானம் பெறுபவர் பட்டியலை வெளியிட்டது. அதில் பிரியங்கா சோப்ரா முதலிடம் பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 46.இந்திய வம்சாவளி விஞ்ஞானிக்கு அமெரிக்காவின் கவுரவமிக்க விருது

இந்திய வம்சாவளி விஞ்ஞானிக்கு 5 லட்சம் டாலர் பரிசுத்தொகை கொண்ட அமெரிக்காவின் கவுரவ மிக்க லெமல்சன் எம்ஐடி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் நாசிக்கில் பிறந்த ரமேஷ் ரஷ்கர் (46), அமெரிக்காவில் உள்ள எம்ஐடி மீடியா லேப்பில் கேமரா கலாச்சார ஆய்வு குழுவை நிறுவி நடத்திவருகிறார். இவர் உலகம் முழுவதும் மனிதர்களின் வாழ்க்கைதரத்தை உயர்த்துவதற்கான கண்டுபிடிப்புகளை உருவாக்கி புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.

ரஷ்கரின் இந்த மகத்தான சாதனையைப் பாராட்டும் வகையில் 5 லட்சம் டாலர் பரிசுத் தொகை கொண்ட (இந்திய மதிப்பில் ரூ.3 கோடியே 34 லட்சத்து 39,975) அமெரிக்காவின் கவுரவமிக்க லெமல்சன் எம்ஐடி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விருது நிறுவனத்தின் செயல் இயக்குனர் ஸ்டெபானி கவுச் கூறும்போது, "கண்டுபிடிப்பாளர், கல்வியாளர், மாற்றத்தை ஏற்படுத்துபவர் என ரஷ்கர் பன்முக திறன் கொண்ட மனிதராக மிளர்கிறார். உலகம் முழு வதும் நேர்மறையான மாற்றங்களை விதைக்கும் நடவடிக்கையிலும் அவர் தீவிரமாக பணியாற்றி வருகிறார்" என புகழாரம் சூட்டியுள்ளார்.

விருது மூலம் கிடைக்கும் இந்தப் பரிசுத் தொகையின் ஒரு பகுதியை, பல்வேறு நாடுகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டிருக்கும் இளம் விஞ்ஞானிகளுக்கு வழங்குவதற்காக புதிய அமைப்பைத் தொடங்கப்போவதாக ரமேஷ் ரஷ்கர் தெரிவித்துள்ளார்.

மூடியிருக்கும் புத்தகத்தைத் திறக்காமலேயே அதைப் படிக்க உதவும் புதிய தொழில்நுட்பத்தை யும் விநாடிக்கு ஒரு டிரில்லியன் பிரேம்களைப் படம்பிடிக்கும் அதிநவீன கேமராவையும் ரஷ்கர் கண்டுபிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 47.அமெரிக்காவில் இந்திய வம்சாவளி பெண் நீதிபதியாக நியமனம்

அமெரிக்காவின் நியூயார்க் மாவட்ட நீதிபதிகளில் ஒருவராக 47 வயது இந்திய வம்சாவளி பெண் நியமிக்கப்பட்டுள்ளார்.

டயானி குஜராத்தி என்ற இவர், நியூயார்க் தெற்கு மாவட்ட அரசு வழக்கறிஞர் அலுவலகத்தில், கிரிமினல் வழக்கு பிரிவின் துணைத் தலைவராக கடந்த 2012 முதல் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில் அமெரிக்க அதிபர் ஒபாமா நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில், "அமெரிக்காவின் மாவட்ட நீதிமன்ற அமர்வில் நீதிபதியாக பணியாற்ற டயானி குஜராத்தியை நியமித்துள்ளேன். அமெரிக்க மக்களுக்கு மிகச்சிறந்த முறையில் இவர் பணியாற்றுவார் என நம்புகிறேன்" என்று கூறியுள்ளார். செனட் அவையின் ஒப்புதலுக்குப் பிறகு இவர் நீதிபதியாக பொறுப்பேற்பார்.

டயானியின் தந்தை தமோதர் எம் குஜராத்தி, அமெரிக்க ராணுவ அகாடமியில் பொருளாதார பேராசிரியராக பணியாற்றுகிறார். பாம்பே பல்கலைக்கழகத்தில் 1960-ல் எம்.காம் முடித்த தாமோதர், 1965-ல் சிகாகா பல்கலை.யில் பிஎச்.டி முடித்தார்.

### 48.சீனாவில் 20,000 கி.மீ. புல்லட் ரயில் பாதை: உலகிலேயே மிகவும் நீளமானது

உலகிலேயே நீளமான அதிவேக ரயில் (புல்லட்) பாதைகளைக் கொண்ட நாடாக சீனா உருவெடுத்துள்ளது. அந்நாட்டில் உள்ள

Web2PDF
converted by Web2PDFConvert.com

புல்லட் ரயில் பாதையின் நீளம் 20 ஆயிரம் கிலோ மீட்டரைத் தாண்டியது

நாட்டின் மத்திய பகுதியில் உள்ள ஹெனான் மாகாணத்தின் ஜெங்சூ நகரையும் கிழக்கு பகுதியில் உள்ள ஜியாங்சு மாகாணத்தின் சுசூ நகரையும் இணைக்கும் வகையில் புதிய பாதை அமைக்கப்பட்டது. இது நேற்று பயன்பாட்டுக்கு வந்தது.

360 கி.மீ. நீளம் கொண்ட இந்த பாதை, மிக முக்கியமான வடக்கு-தெற்கு பாதைகளை இணைக்கிறது. இதன்மூலம் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளுக்கிடையிலான பயண நேரம் கணிசமாகக் குறைகிறது.

குறிப்பாக, ஜியான் மற்றும் ஷாங்காய் நகரங்களுக்கு இடையிலான பயண நேரம் 11 மணியிலிருந்து 6 மணியாகக் குறையும். மொத்தம் 9 ரயில் நிலையங்களைக் கொண்ட இந்த வழித்தடத்தில் மணிக்கு 300 கி.மீ. வேகத்தில் ரயில் செல்லும்.

இதன்மூலம், சீனாவில் உள்ள அதிவேக ரயில் பாதையின் மொத்த நீளம் 20 ஆயிரம் கிலோ மீட்டரைத் தாண்டி உள்ளது. இதனால் உலகின் நீளமான அதிவேக ரயில் பாதையைக் கொண்ட நாடு என்ற பெருமை சீனாவுக்கு கிடைத்துள்ளது.

இந்தியா உள்ளிட்ட நாடுகளில் அதிவேக ரயில்பாதை அமைப்பதற்கான பணி ஒப்பந்தங்களைப் பெற ஜப்பான், சீனா இடையே போட்டி நிலவுகிறது. மும்பை - அகமதாபாத் இடையிலான அதிவேக ரயில் பாதைக்கான ஒப்பந்தம் ஜப்பானுக்கு வழங்கப்பட்டுள்ளது. சென்னை, டெல்லி இடையே அதிவேக ரயில் பாதை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து சீனா ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

### 49.இந்திய பணியாளர்களில் 34 சதவீதம் பேர் திறமையற்றவர்கள்

இந்திய பணியாளர்களில் 34 சதவீதம் பேர் திறமையில்லாதவர்களாக இருக்கின்றனர் என்று சமீபத்தில் வெளியான ஆய்வில் தெரியவந்துள்ளது. இது சீனாவில் 47 சதவீதமாக இருக்கிறது.

பிஎன்பி மெட்லைப் பணியாளர் நலன் குறித்த ஆய்வை வெளியிட்டுள்ளது. ஆறு நாடுகளில் உள்ள மூன்றில் ஒரு பங்கு பணியாளர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வு குறித்து பிஎன்பி மெட்லைப் அறிக்கை வெளியிட்டுள்ளது. 34 சதவீத இந்திய பணியாளர்கள் திறமை குறைவாக இருப்பதாக நம்புகிறார்கள். இது போலாந்து, இங்கிலாந்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் 40 சதவீதமாகவும் சீனாவில் 47 சதவீதமாகவும் உள்ளது. ரஷ்யாவில் 56 சதவீதம் பேர் திறமை குறைவாக உள்ளார்கள் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நிறுவனங்கள் பணியாளர்களை தக்கவைத்துக் கொள்வதற்கும் கவர்ந்து இழுப்பதற்கும் சம்பளம் மற்றும் சலுகைகளில் அதிகம் கவனம் செலுத்தும். தற்போது பணியாளர்களை தக்கவைத்துக் கொள்ள வெறும் சம்பளம் மட்டுமல்லாமல் சிறப்புச் சலுகைகளை வழங்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாக அறிக்கை தெரிவிக்கிறது.

மற்ற நிறுவனங்களுக்குப் போட்டியாக பணியாளர்களை ஈர்க்க சலுகைகளை வழங்குகிறார்கள் என்று ஆய்வில் கலந்து கொண்ட 88 சதவீத இந்திய பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். மிகப் பெரும்பான்மையான எம்என்சி நிறுவனங்கள் மருத்துவ காப்பீடு, ஆயுள் காப்பீடு, விபத்துக் காப்பீடு போன்றவற்றை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

பணியாளர்களுக்கு சலுகைகளை வழங்கவேண்டியது அதிகரித்து வருகிறது. மிகச் சிறிய நிறுவனங்களும் திறமையானவர்களை பணியில் தக்கவைத்துக் கொள்வதற்கு வரக்கூடிய வருடங்களில் சலுகைகளை வழங்க வேண்டி வரும். உடல்நலம் சார்ந்த சலுகைகள், ஓய்வுகால சலுகைகள் மற்றும் நிதி சார்ந்த திட்டங்கள் போன்றவை இந்த சலுகைகளில் முக்கிய பங்கு வகிக்கும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### 50.அந்நிய மறு காப்பீட்டு நிறுவனங்களுக்கு அனுமதி: ஐஆர்டிஏ தலைவர் விஜயன் தகவல்

சர்வதேச அளவில் பிரபலமாக உள்ள மறு காப்பீட்டு நிறுவனங்கள் விரைவில் இந்தியாவில் தங்களது செயல்பாடுகளைத் தொடங்க உள்ளன என்று இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் (ஐஆர்டிஏ) தலைவர் விஜயன் கூறினார்.

தற்போது இந்தியாவில் பொதுத்துறை நிறுவனமான ஜிஐசி நிறுவனம் மட்டுமே மறு காப்பீட்டு பணிகளை மேற்கொள்கிறது.

சர்வதேச அளவில் மூனிச் ஆர்இ, ஸ்விஸ் ஆர்இ, ஸ்கோர், ஹனோவர் ஆர் உள்ளிட்ட நிறுவனங்கள் மறு காப்பீட்டில் ஈடுபட்டுள்ள பிரபலமான நிறுவனங்களாகும். பொது வாக அந்நிய காப்பீட்டு நிறுவனங்கள் இங்கு செயல்பாடுகளைத்தொடங்க ஆர்1 லைசென்ஸ் பெற வேண்டும். அடுத்த கட்டமாக ஆர்2 மற்றும் ஆர்3 லைசென்ஸ்களைப் பெற வேண்டும்.

மூன்று கட்ட லைசென்ஸைப் பெற்ற பிறகுதான் அந்நிய மறு காப்பீட்டு நிறுவனங்கள் இங்கு கிளைகளைத் தொடங்க முடியும். இது தொடர்பாக சில நிறுவனங்கள் ஐஆர்டிஏவை அணுகியுள்ளதாக விஜயன் குறிப்பிட்டார்.

குறைந்தபட்சம் 6 நிறுவனங்கள் இங்கு கிளைகள் தொடங்க அனுமதி கோரியுள்ளன. அடுத்த மூன்று மாதங்களுக்குள் அனுமதி பெற்று அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இங்கு கிளைகளை அமைக்கும் என எதிர்பார்ப்பதாக அவர் கூறினார். அடுத்த மாதம் நடைபெற உள்ள ஐஆர்டிஏ இயக்குநர் கூட்டத்தில் இந்நிறுவனங்களுக்கு ஆர்2 அனுமதி வழங்குவது குறித்து முடிவு செய்யப்பட்டு வழங்கப்படும் என்றார்.

இது தொடர்பான வரைவு அறிக்கை தயாரிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. நிறுவனங்கள் இது தொடர்பான அறிக்கையை பார்க்க வேண்டும் என வற்புறுத்துகின்றன. இது தொடர்பாக இறுதி அறிக்கை தயாரிக்கும் நிலையை எட்டவில்லை என்றார்.

பொது காப்பீட்டு நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் அவைகளைப் பட்டியலிடலாம் என அரசு அறிவித்துவிட்டது. ஆனால் இது தொடர்பாக எவ்வித அதிகாரபூர்வ ஆணையும் வெளியாகவில்லை என்றார் விஜயன்.

### 51.உர்ஜித் படேல் கையெழுத்தில் புதிய 20 ரூபாய் நோட்டுகள்

புதிதாக ரிசர்வ் வங்கி கவர்னராகப் பொறுப்பேற்றுள்ள உர்ஜித் படேல் கையெழுத்தில் புதிய 20 ரூபாய் நோட்டுகள் விரைவில் வெளியாக உள்ளன.

மகாத்மா காந்தி சீரிஸ் 2005-ல் வெளியான நோட்டுகளில் ஆர் என்ற எழுத்து நம்பர் பேனலில் இடம்பெற்றிருக்கும். இதன் பின்பகுதியில் 2016 என்று அச்சாகும். வழக்கமான வடிவமைப்பு மற்றும் பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டதாக இந்த ரூபாய் நோட்டுகள் இருக்கும். சிறிய அளவிலான மாறுதல்கள் இதில் இடம்பெற்றிருக்கும்.

20 எண், ஆர்பிஐ முத்திரை, மகாத்மா காந்தி உருவம், உத்திர வாத பிரிவு, கவர்னரின் கையெழுத்து என்பன வழக்கமாக நோட்டுகளில் சற்று உயர்ந்த அளவினதாக இருக்கும். ஆனால் புதிய நோட்டுகளில் இவை வழக்கமானதாக இருக்கும். ரூபாய் நோட்டின் முக்கோண வடிவிலான அடையாள சின்னம் இந்த புதிய ரூபாய் நோட்டில் நீக்கப்பட்டிருக்கும். இருப்பினும் நிறத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

### 52.பணிபுரிய சிறந்த ஐடி நிறுவனங்கள் பட்டியலில் அடோப், கூகுள், மைக்ரோசாப்ட்

Shanmugam IAS Study Circle

Web2PDF
converted by Web2PDFConvert.com

ஐடி மற்றும் ஐடிஇஎஸ் துறையில் பணிபுரிய சிறந்த 50 நிறுவனங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நடைமுறைகள் மற்றும் பணியாளர்களின் மதிப்பீடுகளை வைத்து இந்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. `கிரேட் பிளேஸ் டு வொர்க் இன்ஸ்டியூட் இந்தியா' இந்த பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்த பட்டியலில் உள்ள நிறுவனங்களில் 47 சதவீத நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்கள் (எம்என்சி) ஆகும். அடோப் இந்தியா, கூகுள் இந்தியா மற்றும் மைக்ரோசாப்ட் இந்தியா ஆகியவை முதல் மூன்று இடங்களுக்குள் உள்ளன.

குளோபல் அனலிடிக்ஸ் இந்தியா, ஹேப்பியஸ்ட் மைண்ட்ஸ் டெக்னாலஜீஸ், ஹிட்டாச்சி டேட்டா சிஸ்டம்ஸ், நெட் ஆப் இந்தியா உள்ளிட்ட நிறுவனங்களும் இந்த பட்டியலில் உள்ளன. தவிர எஸ்ஏபி இந்தியா, இன்டெல் இந் தியா, பேபால் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களும் உள்ளன.

சலுகைகள், வேலை-குடும்ப சமன்பாடு, லாபத்தை பிரித்து கொடுத்தல் ஆகிய பிரிவுகளில் இந்திய நிறுவனங்களை விட பன்னாட்டு நிறுவனங்கள் முன்னிலையில் உள்ளன.

ஐந்து வருடங்களுக்குள் இருக்கும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் பணிபுரியும் இடங்களில் கொண்டாட்டம், தவறுகளை பொறுத்துக்கொள்ளுதல், எளிதாக தலைமையை அணுகுதல் ஆகிய பிரிவில் முன்னிலையில் உள்ளன.

பணிபுரிய சிறந்த நிறுவனங்களில் 24 சதவீத நிறுவனங்கள் பெங்களூருவில் உள்ளன. சிஸ்கோ, ஹேப்பியஸ்ட் மைண்ட்ஸ், சேல்ஸ்போர்ஸ் மற்றும் இஎம்சி இந்தியா ஆகிய நிறுவனங்கள் உள்ளன. 145 நிறுவனங்களில் 36,500 நபர்களின் கருத்துகளை வைத்து முதல் 50 நிறுவனங்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 53.இந்திய பணக்காரர்கள் பட்டியலில் பதஞ்சலி பால்கிருஷ்ணா

இந்திய பணக்காரர்கள் பட்டியலை ஹுருன் ஆய்வு நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. இதில் பதஞ்சலி நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஆச்சார்யா பால்கிருஷ்ணா இடம் பிடித்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல் இந்தியாவின் முக்கிய தொழிலதிபர்களான பஜாஜ் ஆட்டோ நிறுவனத் தலைவர் ராகுல் பஜாஜ், மாரிகோ தலைவர் ஹரிஷ் மரிவாலா, பிரமல் என்டர்பிரைசஸ் நிறுவனத்தின் அஜய் பிரமல் ஆகியோரை விட இந்தப் பட்டியலில் முன்னிலையில் இருக்கிறார் ஆச்சார்யா பால் கிருஷ்ணா.

இவரின் சொத்து மதிப்பு ரூ.25,600 கோடி இருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த பட்டியலில் இவர் 26-ம் இடத்தில் இருக்கிறார்.

2007-ம் ஆண்டு சிறிய மருந்தகமாக இந்த நிறுவனம் தொடங்கப்பட்டது. இப்போது முன்னணி எப்எம்சிஜி நிறுவனமாக பதஞ்சலி இருக்கிறது. கடந்த வருடம் இந்த நிறுவனத்தின் வருமானம் ரூ.5,000 கோடியை தொட்டது. எப்எம்சிஜி பிரிவில் இருக்கும் இமாமி, டாபர் மற்றும் மாரிகோ ஆகிய நிறுவனங்களின் வருமானத்தை இவரது நிறுவனம் தாண்டிவிட்டது. நடப்பு நிதி ஆண்டுக்கு ரூ.10,000 கோடி இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.

தொடர்ந்து ஐந்தாவது வருடமாக இந்த பட்டியலில் முகேஷ் அம்பானி இடம் பெற்றுள்ளார். இவரின் சொத்து மதிப்பு ரூ.1.63 லட்சம் கோடி ஆகும். அவரைத் தொடர்ந்து சன் பார்மாவின் திலிப் சாங்வி, பலோன்ஜி மிஸ்திரி ஆகியோர் இந்த பட்டியலில் இருக்கின்றனர்.

## 54.தொலைத் தொடர்பு சேவை வர்த்தகத்தில் இணைகிறது ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் ஏர்செல் நிறுவனங்கள்

தொலைத் தொடர்பு சேவைத்துறை வர்த்தகத்தில் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ், ஏர்செல் நிறுவனங்கள் ஒன்றாக இணைகின்றன.

இதனையடுத்து அனில் அம்பானியின் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தின் கம்பியில்லா தொலைத்தொடர்பு சேவைப்பிரிவு ஏர்செல்லுடன் இணைக்கப்படவுள்ளது. இரண்டு நிறுவனங்களும் சேர்ந்து உருவாக்கும் நிறுவனத்தில் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் மற்றும் ஏர்செல்லின் தலைமை நிறுவனமான மேக்சிஸ் நிறுவனம் ஆகியவை தலா 50% பங்குகளை சரிசமமாக வைத்திருக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

Shanmugam IAS Study Circle

இணைப்புக்குப் பிறகு இந்த நிறுவனங்களின் பயனாளர்கள் எண்ணிக்கை 19 கோடியாக இருக்கலாம். ஏர்டெல் நிறுவனம் 25 கோடி வாடிக்கையாளர்களைக் கொண்ட நிறுவனமாகும். இந்த நடவடிக்கையினால் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தின் கடன் ரூ.20,000 கோடி குறையும் அதேவேளையில் ஏர்செல் நிறுவனத்தின் கடன் ரூ.4000 கோடி குறையும்.

இந்த இணைப்பினால் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை மற்றும் வருவாய் அடிப்படையில் இந்தியாவில் 4-வது பெரிய தொலைத் தொடர்பு சேவை நிறுவனம் உருவாகிறது. மேலும் ஸ்பெக்ட்ரம் அலைவரைசைக் கையகத்தில் 448 மெகா ஹெட்ஸுடன் இரண்டாம் இடத்தில் இருக்கும் இந்த இணைந்த நிறுவனங்கள். இணைப்பின் மூலம் உருவாகும் புதிய நிறுவனத்தின் சொத்து மதிப்பு ரூ.65,000 கோடி, நிகர மதிப்பு ரூ.35,000 கோடியாக இருக்கும்.

## 55.அதிகாரம் மிக்க பெண்கள் பட்டியலில் 3 வங்கி தலைவர்கள்

அதிகாரம் மிக்க பெண்கள் பட்டியலில் வங்கித் தலைவர்கள் அருந்ததி பட்டாச்சார்யா, சாந்தா கொச்சார், ஷிகா சர்மா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். அமெரிக்காவுக்கு வெளியே சர்வதேச அளவில் அதிகாரம் மிக்க பெண்கள் பட்டியலை பார்ச்சூன் இதழ் வெளியிட்டுள்ளது.

இதில் பாரத ஸ்டேட் வங்கியின் (எஸ்பிஐ) தலைவர் அருந்ததி பட்டாச்சார்யா இரண்டாம் இடத்தில் உள்ளார். ஐரோப்பிய மண்டலத்தில் மிகப்பெரிய வங்கியாகத் திகழும் பிஓஎஸ்என் குழுமத் தலைவர் பான்கோ சடென்டர் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். மொத்தம் 19 நாடுகளில் உள்ள பெரும் பெண் தலைவர்கள் இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஐசிஐசிஐ வங்கியின் தலைமைச்செயல் அதிகாரியான சாந்தா கொச்சார் 5-வது இடத்திலும் ஆக்சிஸ் வங்கியின் தலைமைச் செயல் அதிகாரியான ஷிகா சர்மா 19-வது இடத்திலும் உள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் அருந்ததி பட்டாச்சார்யாவின் திறன் மேம்பட்டுள்ளது என்று பார்ச்சூன் சுட்டிக் காட்டியுள்ளது. ரிசர்வ் வங்கியின் கவர்னராக ரகுராம் ராஜனுக்கு அடுத்து இவர் நியமிக்கப்படலாம் என்ற யூகங்கள் பெருமளவு எழுந்தன.

கடந்த மே மாதத்தில் துணை வங்கிகளை இணைக்கும் முடிவை வெளியிட்டு அதை நிறைவேற்றும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளார். வங்கிகள் இணைக்கப்பட்டால் ஆசிய அளவில் மிகப் பெரிய வங்கி களில் ஒன்றாக எஸ்பிஐ திகழும்.

இவரது பதவிக்காலம் அக்டோபர் மாதத்தில் முடிவடைய உள்ளது. இருப்பினும் இவருக்கு பதவி நீட்டிப்பை அரசு அளிக்கும் என எதிர்பார்ப்பதாக பார்ச்சூன் குறிப்பிட்டுள்ளது.

ஐசிஐசிஐ வங்கியை முன்னெடுத்துச் செல்வதில் மிகுந்த தொலை நோக்கு சிந்தனையோடு செயல்படுகிறார் சாந்தா கொச்சார் என்று பார்ச்சூன் புகழாரம் சூட்டியுள்ளது.

Web2PDF
converted by Web2PDFConvert.com

கடந்த 7 ஆண்டுகளாக தொடர்ந்து தலைமைப் பொறுப்பில் உள்ள கொச்சார், வங்கியின் வருமானத்தை அதிகரிக்கவும், கடனை வசூலிப்பதிலும் முனைப்பு காட்டி வருவதாக அது தெரிவித்துள்ளது.

இந்தியாவில் விரைவான வளர்ச்சியை எட்டிவரும் தனியார் வங்கிகளில் ஒன்றாக ஆக்சிஸ் வங்கி திகழ்கிறது. கடந்த நிதி ஆண்டில் வங்கியின் வருமானம் 790 கோடி டாலராக உயரவும்,1,800 நகரங்களில் 3,000 கிளைகளோடு வங்கி விரிவடையவும் இவரது பங்களிப்பு அபரிமிதமானது என்று பார்ச்சூன் குறிப்பிட்டுள்ளது.

## 56.மாறுகிறது நிதியாண்டு வரையறை

பிரதமர் மோடி தலைமையில் இன்று நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் பொது பட்ஜெட்டுடன், ரயில்வே பட்ஜெட்டை இணைத்து ஒரே பட்ஜெட்டாக தாக்கல் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது. இனி மேல் ரயில்வே பட்ஜெட் மற்றும் பொது பட்ஜெட் ஆகியன இணைத்து ஒரே பட்ஜெட்டாக தாக்கல் செய்யப்படும். அதே சமயம் ரயில்வே துறை சுயமாக செயல்படும் உரிமம் தொடர்ந்து பாதுகாக்கப்படும். திட்டம் மற்றும் திட்டமிடப்படாத சீர்திருத்தங்களுக்கான அறிவிப்புக்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் பட்ஜெட் ஒன்றாக இணைக்கப்படும்.

ஓய்வுபெற்ற சுதந்திர போராட்டத் தியாகிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கான ஓய்வூதியத்தை உயர்த்தவும், ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான தற்போதைய நிதியாண்டு வரையறை மாற்றி அமைக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
நிதியாண்டு வரையறை மாற்றம் தொடர்பாக பொருளாதார ஆலோசகருடன் ஆலோசித்து முடிவு செய்யப்படும். தியாகிகளுக்கான ஓய்வூதிய உயர்வு 2016ம் ஆண்டு சுதந்திர தினம் முதல் கணக்கிட்டு வழங்கப்படும். ஓய்வூதியத்திற்கான அகவிலைப்படியையும் 20 சதவீதம் உயர்த்தி வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
நிதியாண்டு மாற்றத்திற்கு ஆலோசனை கூற முன்னாள் பொருளாதார ஆலோசகர் சங்கர் ஆச்சார்யா தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

## 57.பெண்கள் பணியாற்ற சிறந்த மாநிலம் : 9வது இடத்தில் தமிழகம்

பெண்கள் பணியாற்ற சிறந்த டாப் 10 மாநிலங்களில் சிக்கிம் முதலிடத்திலும், தமிழகம் 9வது இடத்திலும் உள்ளன. தலைநகர் டில்லி டாப் 10 பட்டியலில் இடம்பெறவில்லை.
பெண்கள் பணியாற்ற சிறந்த இந்திய மாநிலங்கள் பற்றிய ஆய்வை சிஎஸ்ஐஎஸ் அமைப்பு நடத்தியது. இதில் அதிகபட்சமாக சிக்கிம் மாநிலம் 40 புள்ளிகளையும், குறைந்தபட்சமாக டில்லி 8.5 புள்ளிகளையும் பெற்றுள்ளன. பெண்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றுவதற்கு நேரம் தொடர்பான சட்ட ரீதியிலான கட்டுப்பாடுகள், ஐடி துறை, பிற துறைகள், பணியிடத்தில் பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்கள், பணி செய்யும் பெண்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

இதில் டாப் 10 மாநிலங்கள் பட்டியலில் சிக்கிம் - 40 புள்ளிகள், தெலுங்கானா - 28.5 புள்ளிகள், புதுச்சேரி - 25.6 புள்ளிகள், கர்நாடகா - 24.7 புள்ளிகள், இமாச்சல பிரதேசம் - 24.2 புள்ளிகள், ஆந்திரா - 24 புள்ளிகள், கேரளா - 22.2 புள்ளிகள், மகாராஷ்டிரா - 21.4 புள்ளிகள், தமிழகம் - 21.1 புள்ளிகள், சட்டீஸ்கர் - 21.1 புள்ளிகள் பெற்றுள்ளன. இவற்றில் சிக்கிம், கர்நாடகா, ஆந்திரா, தமிழகம் ஆகிய 4 மாநிலங்களில் கோர்ட் உத்தரவுப்படி தொழிற்சாலைகளில் பெண்கள் இரவு நேரங்களில் பணியாற்றுவது உள்ளிட்ட அனைத்து கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

9 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பெண்கள், எந்த துறையிலும் இரவு நேர பணி செய்ய அனுமதி அளிக்கப்படவில்லை. பணிகளில் பெண்களுக்கு பங்களிக்கும் நாடுகளில் இந்தியா மிகவும் பின்தங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் 24 சதவீதம் மட்டுமே பெண்களுக்கு வேலையில் பங்களிப்பு அளிக்கப்படுகிறது.

## 58.இந்தியாவில் சார்க் மாநாடு

சார்க் நாடுகளின் தலைசிறந்த பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை நிபுணர்கள் கலந்து கொள்ளும் இரண்டு நாள் மாநாடு இந்தியாவில் நாளை துவங்க உள்ளது. உளவுத்துறை இயக்குனர் தினேஷ்வர் சர்மா மற்றும் சார்க் நாடுகளின் உளவுத்துறை தலைவர்கள் இணைந்து செப்டம்பர் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் இந்த மாநாட்டை நடத்துகின்றனர்.
காஷ்மீரின் யூரி தாக்குதலுக்கு பிறகு இந்தியாவில் நடக்கும் இந்த மாநாட்டை புறக்கணிக்க போவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது. பாகிஸ்தான் சார்பில் அந்நாட்டு உளவுத்துறை இயக்குனர் அப்தாப் சுல்தான் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார் என தெரிவித்துள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான சார்க் நாடுகளின் பலத்தை அதிகரிப்பதற்காகவே இந்த சார்க் மாநாடு நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்த மாநாட்டில் போதைப் பொருள் கடத்தல் தடுப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, பயங்கரவாதம் தொடர்பான குற்றங்களை கண்காணிப்பது போன்ற விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

யூரி தாக்குதலுக்கு பிறகு உலக அரங்கில் பாக்.,ஐ தனிமைப்படுத்த வேண்டும் என உலக நாடுகள் பலவும் பாகிஸ்தானுக்கு எதிராக குரல் எழுப்பி வரும் நிலையில், இந்தியாவில் நடக்கும் சார்க் மாநாட்டை பாக்., புறக்கணிக்க போவதாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## 59. உலக அமைதி தினம்

உலக அமைதி நாள் (International Day of Peace) ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் பிரகடனத்தின் மூலம் ஆண்டு தோறும் செப்டம்பர் மாதம் 21ம் திகதி ஐக்கிய நாடுகளின் சபையின் சகல உறுப்பு நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தினம் 1981இல் இருந்து ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் வரும் மூன்றாம் செவ்வாய்க் கிழமையிலேயே கொண்டாடப்பட்டு வந்தது. 2002 ஆம் ஆண்டில் இருந்து இத்தினம் செப்டம்பர் 21இல் கொண்டாடப்படுகிறது. அமைதி என்பதற்குப் பல பொருட்கள் தமிழில் உள்ளன. குறிப்பாக யுத்தம் பகைமை, வன்முறை என்பவற்றுக்கு எதிர்ச் சொல்லாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்காலப் பயன்பாட்டில் அமைதி என்பது, பகைமை இல்லாத ஒரு நிலையைக் குறிக்கும் ஒரு கருத்துருவாகும். சர்வதேச ரீதியில் இது போர் இல்லாத நிலையையும் குறிக்கும். மகாத்மா காந்தியின் கூற்றுப்படி, ஒடுக்கப்பட்ட சமூகம் ஒன்றில் வன்முறைகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால், சமூகநீதி இன்மை காரணமாக அங்கே அமைதி இருப்பதாகக் கூறமுடியாது. காந்தி, அமைதி குறித்த ஒரு நோக்கைக் கொண்டிருந்தார். நீதி என்பது அமைதிக்கு அடைப்படையானதும் கட்டாயமானதுமான அம்சம் என்று அவர் கருதினார். இதன்படி, அமைதிக்கு வன்முறை இல்லாமை மட்டுமன்றி, நீதி இருக்கவேண்டியதும் அவசியம்.

## 60.ஸ்மார்ட் சிட்டி பட்டியலில் சேலம், மதுரை, தஞ்சை, வேலூர்

மத்திய அரசின் நகர்ப்புற கட்டமைப்பு மேம்பாட்டு திட்ட பட்டியலில் தமிழகத்தை சேர்ந்த சேலம், மதுரை, தஞ்சை, வேலூருக்கு இடம் கிடைத்தது. இதனை மத்திய நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் வெங்கையா நாயுடு அறிவித்தார்.மோடி தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல் நகர் கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி பல்வேறு போட்டிகள் மத்தியில் நகரங்கள் தேர்வு செய்யப்படும். ஏற்கனவே பல்வேறு நகரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இன்று 3 வது பட்டியல் வெளியானது.

Shanmugam IAS Study Circle

இதில் உத்திரபிரதேசம், அசாம், தமிழகம், மத்தியபிரதேசம், ஆந்திரா, பஞ்சாப் உள்ளிட்ட 12 மாநிலங்களில் 67 நகரங்கள் போட்டியிட்டதில் தற்போது 27 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் சேலம், மதுரை, தஞ்சை, வேலூர், திருப்பதி, மங்களூரு, அமிர்தசரஸ், குவாலியர், ஆகியன தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

## 61.நீண்ட தூர ஏவுகணை வெற்றிகரமாக சோதனை

இஸ்ரேல் தொழில்நுட்பத்துடன், மத்திய அரசு தயாரித்துள்ள, தரையில் இருந்து, நீண்ட தூரம் விண்ணில் சென்று இலக்கை தாக்கும், அதி நவீன ஏவுகணை, நேற்று வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

டி.ஆர்.டி.ஓ., எனப்படும் இந்திய ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், இஸ்ரேல் நாட்டு தொழில்நுட்ப உதவியுடன், தரையில் இருந்து, விண்ணில் பாய்ந்து சென்று தாக்கி, இலக்கை அழிக்க வல்ல, நவீன ஏவுகணைகளை வடிவமைத்து வருகிறது. இதில், நடுத்தர தூரம் செல்லும் ஏவுகணை, ஜூன் மாதம்,

Web2PDF
converted by Web2PDFConvert.com

வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, தரையில் இருந்து, நீண்ட தூரம் பயணம் செய்து, விண்ணில் சென்று இலக்கை தாக்கும் ஏவுகணை, நேற்று வெற்றிகரமாக பரிசோதித்து பார்க்கப்பட்டது.

ஒடிசா மாநிலம் சந்திப்பூர் ஏவுதளத்தில் இருந்து, இந்த ஏவுகணை விண்ணில் செலுத்தப்பட்டது. ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடந்தது. இந்த சோதனைக்காக, சந்திப்பூர் ஏவுதளத்தை சுற்றி வசிக்கும் மக்கள், பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்றப்பட்டனர்.

## 62.இந்தியாவில் 59% பகுதி நிலஅதிர்வால் பாதிக்கப்படும் அபாயம்

இந்தியாவில் சுமார் 59 சதவீதம் நிலப்பகுதிகளுக்கு கடுமையான அல்லது மிதமான அல்லது லேசான நிலநடுக்கங்களால் பாதிக்கப்படும் இருப்பதாக நிலஅதிர்வு மையம் எச்சரித்துள்ளது.

தேசிய பேரிடர் மேலாண்மை கழகத்தின் சார்பில் நிலஅதிர்வு தொடர்பான புதிய வரைபடம் ஒன்று ஆப்ஸ் வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இன்னும் 3 மாதங்களில் மொபைல் போன்கள் மூலம் செயல்படுத்தும் வகையில் கொண்டு வரப்பட உள்ளது. இதனை பயன்படுத்தி, ஒவ்வொருவரும் தங்களின் வீடு அல்லது அலுவலகம் நிலநடுக்கத்தால் பாதிக்கப்படும் வகையில் உள்ளதா, இல்லையா என்பதை தெரிந்து கொள்ளலாம். இந்த ஆப்சை கொண்டு நடத்தப்பட்ட ஆய்வில், இந்தியாவில் உள்ள 59 சதவீதம் பகுதிகள் நிலநடுக்கத்தால் பாதிக்கப்படும் தன்மை கொண்டவை என்பது தெரிய வந்துள்ளது.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் சுமார் 30.4 கோடி மக்கள் நிலநடுக்கத்தால் பாதிக்கப்படும் அபாய நிலையில் உள்ளனர் எனவும் இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 63.பாக்., பயங்கரவாத நாடு : அமெரிக்காவில் தீர்மானம்

பாகிஸ்தானை பயங்கரவாத ஆதரவு நாடாக அறிவிக்கும் தீர்மானத்தை அமெரிக்க எம்.பி.,க்கள் இருவர் கொண்டு வந்துள்ளனர். இது ஐ.நா.,வில் மனிதநேயம் குறித்து பாக்., பிரதமர் நவாஸ் ஷெரீப் பேசுவதற்கு தீர்மானத்துள்ள உரைக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

காஷ்மீரில் கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக நீடித்து வரும் பதற்றம் தொடர்பாக ஐ.நா., சபையில் பேச பாக்., பிரதமர் நவாஸ் ெஷரீப் முடிவு செய்துள்ளார். காஷ்மீரில் இந்திய ராணுவம் மனிதஉரிமை மீறலில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குற்றம்சாட்ட தீர்மானத்துள்ளார். இந்நிலையில் பாக்.,க்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்துள்ளது. எம்.பி.,க்கள் கொண்டு வந்துள்ள இந்த தீர்மானம் தொடர்பாக அமெரிக்க நிர்வாகம் 4 மாதங்களுக்குள் முடிவை அறிவிக்க வேண்டும்.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு பாகிஸ்தான் ஆதரவு அளிக்கிறதா, இல்லையா என்பது பற்றி 90 நாட்களுக்குள் அமெரிக்க அதிபர் விரிவான அறிக்கையை அளிப்பார். இந்த அறிக்கையின் அடிப்படையில் அடுத்த 30 நாட்களில் அமெரிக்க பாதுகாப்பு துறை , பாக்., பயங்கரவாத ஆதரவு நாடா என்பது பற்றிய அறிவிப்பை வெளியிடுவார். அமெரிக்க எம்.பி,க்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தில் பாக்., மட்டுமின்றி இஸ்லாமாத் பல ஆண்டுகளாக ஒசாமா பின்லேடன் உள்ளிட்ட அமெரிக்க எதிரிகள் பலருக்கு புகழிடம் அளித்து வருவதாகவும், பயங்கவாத போருக்கு ஆதுரவு அளித்து வருவதாகவும், இதற்கு பல ஆதாரங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 64.தமிழகத்தில் அமைந்துள்ள உலகின் பெரிய சூரிய மின் சக்தி நிலையம்: தேசத்திற்கு அர்ப்பணிப்பு!

ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் அமைந்துள்ள, அதானி குழுமத்திற்கு சொந்தமான 648 மெகா வாட் திறன் கொண்ட சூரிய மின் சக்தி நிலையம் இன்று தேசத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

Shanmugam IAS Study Circle

ஒரே இடத்தில் அமைந்துள்ள 648 மெகா வாட் திறன் கொண்ட உலகின் மிகப் பெரிய சூரிய மின் சக்தி நிலையம் இன்று தேசத்திற்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

## 65.மீண்டும் உலக வங்கி தலைவராகிறார் ஜிம் யோங் கிம்

உலக வங்கித் தலைவர் பதவிக்கு வேறு யாரும் விண்ணப்பிக்காத நிலையில் 2-ஆவது முறையாகத் தொடர்ந்து உலக வங்கி தலைவராக ஜிம் யோங் கிம் தேர்ந்தெடுக்கப்படுவது உறுதியாகியுள்ளது.

இதுகுறித்து உலக வங்கி நிர்வாகக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

உலக வங்கி தலைவர் பதவிக்கு விண்ணப்பிக்கும் காலம் புதன்கிழமை முடிந்தது. தற்போது தலைவராக உள்ள ஜிம் யோங் கிம்முக்கு போட்டியாக யாரும் விண்ணப்பிக்கவில்லை. இதையடுத்து, விதிமுறைகளின்படி, கிம்முடன் நேர்காணல் நடத்திய பிறகு, உலக வங்கி தலைவர் பதவிக்கு அவர் இரண்டாவது முறையாகத் தேர்வு செய்யப்படுவார்.

இதற்கான பணிகள் 2016-ஆம் ஆண்டு நடைபெற உள்ள உலக வங்கியின் ஆண்டுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும். இந்தக் கூட்டம் அக்டோபர் 7-ஆம் தேதி முதல் 9-ஆம் தேதி வரையில் நடைபெறும் என்று உலக வங்கி நிர்வாகக் குழு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

Shanmugam IAS Study Circle

தற்போது உலக வங்கி தலைவராக உள்ள கிம் யோங் கிம் (56) 2012-ஆம் ஆண்டு அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய பதவிக் காலம் வரும் 2017-ஆம் ஆண்டு ஜூன் 30-ஆம் தேதியுடன் நிறைவு பெறுகிறது.

கொரிய-அமெரிக்க வம்சாவளியைச் சேர்ந்த ஜிம் யோங் கிம், உலக நாடுகளிடையே நிலவி வரும் தீவிர வறுமையைக் குறைக்கும் பல்வேறு திட்டங்களுக்கு முன்னுரிமை தந்து செயலாற்றியவர். இதனால், அவருக்கு உலக வங்கியின் முக்கிய பங்குதாரர்களான அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, சீனா ஆகிய நாடுகளின் அமோக ஆதரவு உள்ளது.

## 66.வரலாறு காணாத மதிப்பில் அமெரிக்கா-இஸ்ரேல் ராணுவ உதவி ஒப்பந்தம்

வரலாறு காணாத வகையில், அமெரிக்கா - இஸ்ரேல் இடையே ரூ. 2.5 லட்சம் கோடி மதிப்பிலான ராணுவ உதவி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இது தொடர்பாக அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் கூறியதாவது: இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக, முன்னெப்போதும் இல்லாத வகையில் 3,800 கோடி டாலர் (சுமார் ரூ. 2.5 லட்சம் கோடி) மதிப்பிலான ராணுவ உதவி பெறும் விதமான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. அடுத்த 10 ஆண்டுகளில் இந்த ராணுவ உதவி வழங்கப்படும். இதன் கீழ் 3,300 கோடி டாலர் ராணுவ தளவடாங்களுக்கான நிதி உதவியாகவும், ஏவுகணைத் திட்டங்களுக்கு 500 கோடி டாலரும் வழங்கப்படுகிறது. இஸ்ரேலின் ஏவுகணைத் திட்டங்களுக்கு அமெரிக்கா உதவி அளிப்பது இதுவே முதல் முறை.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், அதி நவீன எஃப்-15, எஃப்-35 ரகப் போர் விமானங்கள் உள்ளிட்டவை இஸ்ரேலுக்கு வழங்கப்படும். தரைப் படையினரின் தாக்குதல் திறனை அதிகரிக்கும் விதமான தளவாடங்கள் வழங்கப்படும். ஏவுகணைத் தாக்குதலுக்கு இஸ்ரேல் ஆளாகி வரும் நிலையில், தற்காப்புக்கான "அயர்ன் டோம்' உள்ளிட்ட சாதனங்கள் அளிக்கப்படும்.

Shanmugam IAS Study Circle

இந்த நிதி மற்றும் தளவாட உதவியானது, ஏற்கெனவே இஸ்ரேலுக்கு அளிக்கப்பட்டு வரப்படும் உதவிகளைத் தவிர கூடுதலாக அளிக்கப்படுகிறது. இவ்வளவு பெரிய ராணுவ உதவியை வேறு எந்த நாட்டுக்கும் அமெரிக்கா இதுவரை வழங்கியதில்லை என்றார்.

இந்த ஒப்பந்தம் குறித்து அமெரிக்க அதிபர் ஒபாமா கூறுகையில், இஸ்ரேலுக்குப் பாதுகாப்பு அளிக்க அமெரிக்க அரசு உறுதிபூண்டுள்ளதை எந்த சக்தியாலும் அசைக்க முடியாது என்றார்.

இது தொடர்பாக இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக்கப் நேஜல் கூறியதாவது: வரலாறு காணாத வகையிலான ராணுவ உதவி ஒப்பந்தம் இஸ்ரேல்-அமெரிக்கா இடையே ஏற்பட்டுள்ளது. முன்னெப்போதையும்விட இஸ்ரேலுக்கு ஏவுகணை அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. அந்த அச்சுறுத்தலை எதிர்கொள்ள இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும் ராணுவத் தளவாடங்கள் பெரும் உதவியாக இருக்கும் என்றார்.

## 67.எல்.ஐ.சி. தலைவராக வி.கே. சர்மா பொறுப்பேற்பு

பொதுத் துறையைச் சேர்ந்த மிகப்பெரிய ஆயுள் காப்பீட்டு நிறுவனமான எல்.ஐ.சி.யின் தலைவராக வி.கே. சர்மா கூடுதல் பொறுப்பேற்றார். எல்.ஐ.சி. நிறுவனத்தின் தலைவராக இருந்த எஸ்.கே. ராய் வெள்ளிக்கிழமை அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

Web2PDF
converted by Web2PDFConvert.com

இதையடுத்து, தற்போது நிர்வாக இயக்குநர் பொறுப்பில் உள்ள வி.கே. சர்மா, கூடுதல் பொறுப்பாக தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார் என்று எல்.ஐ.சி. அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பணிக்காலம் முடிவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே, எஸ்.கே.ராய் கடந்த ஜூன் மாதத்தில் தனது பதவியை ராஜிநாமா செய்தார். அதனை மத்திய அரசு அப்போது ஏற்கவில்லை. இந்நிலையில் தற்போது அவர் எல்.ஐ.சி. தலைவர் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். எல்.ஐ.சி நிறுவனத்தின் தலைவராக கூடுதல் பொறுப்பேற்றுள்ள வி.கே.சர்மா, கடந்த 2013-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

## 68.இந்திய கிரிக்கெட் அணி தேர்வுக்குழுத் தலைவராக எம்.எஸ்.கே.பிரசாத் நியமனம்

முன்னாள் விக்கெட் கீப்பரும் ஆந்திராவைச் சேர்ந்தவருமான எம்.எஸ்.கே. பிரசாத், சந்தீப் பாட்டீலுக்கு அடுத்தபடியாக இந்திய அணியின் தேர்வுக்குழு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். பிசிசிஐ-யின் 87-வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் மும்பையில் இன்று இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

Shanmugam IAS Study Circle

சந்தீப் பாட்டீல் தலைமை முந்தைய தேர்வுக்குழுவில் பிரசாத் பணியாற்றினார். தற்போது இவர் தலைவராக நியமிக்கப்பட, சரந்தீப் சிங், ககன் கோடா, தேவங் காந்தி, ஜதின் பராஞ்பே ஆகியோர் 5 நபர் தேர்வுக்குழு உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்தத்தேர்வு குழு இங்கிலாந்துக்கு எதிராக நவம்பர் 9-ம் தேதி தொடங்கும் 5 டெஸ்ட் போட்டிகளுக்கான தொடரில் விளையாடும் இந்திய அணியைத் தேர்வு செய்து பணியைத் தொடங்குகின்றனர்.

## 69.இளம் தலைவர்கள் பட்டியலில் 3 இந்தியர்: ஐ.நா. சபை வெளியீடு

ஐ.நா.வின் இளம் தலைவர்கள் பட்டியலில் இரு இந்தியர்கள், ஒரு அமெரிக்க வாழ் இந்தியர் உட்பட 17 பேர் இடம்பெற்றுள்ளனர். நீடித்த வளர்ச்சி இலக்கில் அவர்களின் தலைமைப் பண்பு, ஏழ்மை ஒழிப்பில் பங்களிப்பு, சமத்துவம், சமநீதிக்கான போராட்டம், வரும் 2030-ம் ஆண்டுக்குள் பருவநிலை மாறுபாட்டை எதிர் கொள்ளும் திட்டம் ஆகியவை சார்ந்து 17 இளம் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மகளிர் கல்வி, மறுவாழ்வு, பாலின அத்துமீறல்களுக்கு எதி ரான நடவடிக்கைக்காக ஷீசேய்ஸ் என்ற அமைப்பை நிறுவிய திரிஷா ஷெட்டி (25) இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

திருமணம், திருவிழாக்கள், கொண்டாட்டங்களில் உணவுகள் வீணடிக்கப்படுவதைத் தடுத்து, அவற்றைத் தேவைப்படுவோர்க்கு கொண்டு சேர்ப்பதற்காக ஃபீடிங் இந்தியா அமைப்பை உருவாக்கி செயல்பட்டு வரும் அங்கித் கவார்ட்டா (24) இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள மற்றொரு இந்தியர் ஆவார்.

அமெரிக்க வாழ் இந்தியர் கரண் ஜெராத் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளார். கடலுக்கடி யில் உள்ள எண்ணெய்க் கிணறு களில் இருந்து எண்ணெய் எடுக்கும்போது, எண்ணெய் சிந்தாமல் இருப்பதற்கான மூடி அமைப்பைக் கண்டறிந்ததற்காக இவர் இப்பட்டியலில் இடம்பிடித் துள்ளார்.

## 70.பாராலிம்பிக் நிறைவு விழா: தேசிய கொடி ஏந்திச் சென்றார் மாரியப்பன்

பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் பாராலிம்பிக் போட்டிகள் கடந்த 7-ம் தேதி கோலாகலமாக தொடங்கியது. மொத்தம் 160 நாடுகளை சேர்ந்த 4,342 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். 22 விளை யாட்டுக்களில் 528 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டது. 11 நாட்கள் நடந்த இந்த விளை யாட்டு திருவிழாவின் நிறைவு விழா நிகழ்ச்சிகள், வரலாற்று சிறப்பு மிக்க மரக்கானா ஸ்டேடியத்தில், வண்ணமயமான வாண வேடிக் கைகளுடன் இந்திய நேரப்படி நேற்று அதிகாலை நடை பெற்றது.

பல்வேறு நடன மற்றும் இசை நிகழ்ச்சிகளுக்கு முன்னதாக, சைக்கிள் பந்தயத்தின்போது உயிரிழந்த ஈரான் வீரர் பஹ்மன் கோல்பர் நிஷாத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இரு கைகளும் இல்லாதவரான பிரேசிலை சேர்ந்த ஜோனதன் பாஸ்டோஸ், கால்களால் கிதார் இசைத்து அசத்தினார். தொடர்ந்து கேபி அமர்டான்ஸ், பெர்ணாண்டஸ், வன்சியா டி மட்டா உள்ளிட்டோரின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடந்தன. உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கம் வென்றவரான சேலம் மாவட்டத்தை சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு, கொடி அணிவகுப்பின் போது, இந்திய தேசிய கொடியை ஏந்தி சென்றார். 2020 பாராலிம்பிக் போட்டிகள் ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெறுகிறது. இதையொட்டி ரியோ நகர மேயர் எடுரடோ பயஸ், பாராலிம்பிக் கொடியை சர்வதேச பாராலிம்பிக் கமிட்டி தலைவர் கிராவனிடம் ஒப்படைத்தார். அவர் அதனை டோக்கியோ நகர கவர்னர் யூரிகோ கொய்கியிடம் ஒப்படைத்தார்.

இதன்பின் ஜப்பான் நாட்டின் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. ஜப்பானின் பிரபல மாடலான ஜிமிகோ மேடையில் தோன்றி, இடது காலை இழந்தவரும், தொழில்முறை நடன கலைஞரு மான கோச்சி ஒமியை அறிமுகப் படுத்தினார். பின்னர் அவர் நடனம் ஆடி பார்வையாளர்களை அசத்தினார். தவிர, ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவு விழா போல பாராலிம்பிக் போட்டிகளின் நிறைவுவிழாவும் வண்ணமயமான வாணவேடிக்கையுடன் கோலாகல மாக நிறைவடைந்தது.

107 தங்கப் பதக்கங்கள் உட்பட 239 பதக்கங்களைப் பெற்று பதக்கப் பட்டியலில் சீனா முதலிடம் பிடித்தது. அதற்கு அடுத்த இடத்தில் இங்கிலாந்து 147 பதக்கங்களுடன் உள்ளது. இரண்டு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கத்துடன் இந்த பதக்க பட்டியலில் இந்தியா 43வது இடத்தைப் பிடித்துள்ளது.

## 71.சர்வதேச துப்பாக்கி சுடுதலில் மதுரை மாணவர்கள் சாதனை

சர்வதேச துப்பாக்கி சுடும் போட்டியில் மதுரையைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் இருவர் வெள்ளி, வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

அஜர்பைசானின் கபாலா நகரில் 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஜூனியர் சர்வதேச துப்பாக்கிச் சுடும் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் இந்தியா சார்பில் வீரர்கள் பங்கேற்றனர். இதில் 50 மீட்டர் புரோன் ரைபிள் பிரிவில் மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரி மாணவர் அஜய் நிதீஷ் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இதே பிரிவில் மதுரை தெப்பக்குளம் தியாகராஜர் கலைக்கல்லூரி மாணவர் சர்வேஜ் சொருத் சங்கர் வெண்கலம் வென்றுள்ளார். பதக்கம் வென்ற இருவரும் நாளை மதுரைக்கு வருகின்றனர். பதக்கம் வென்ற வீரர் களுக்கு அவர்களது கல்வி நிறுவ னங்கள், பாராட்டு தெரிவித்துள்ளன.

## 72.500-வது டெஸ்டில் கால்பதிக்கும் இந்திய அணி: சி.கே.நாயுடு முதல் விராட் கோலி வரை ஓர் அலசல்

இந்தியா - நியூஸிலாந்து அணிகள் வரும் 22-ம் தேதி கான்பூர் கீரின்பார்க் மைதானத்தில் டெஸ்ட் போட்டியில் விளையாட உள்ளது. இது இந்தியாவின் 500-வது டெஸ்ட் போட்டி. 1932-ம் ஆண்டில் இருந்து சர்வதேச கிரிக்கெட்டில் பங்கேற்க ஆரம்பித்த இந்தியா 84 வருட கிரிக்கெட் பயணத்தில் உச்சங்களையும் தொட்டது. அதேவேளையில் அதளபாதாளத்திலும் விழுந்தது. அதுபற்றிய ஒரு சிறிய தொகுப்பு

**அறிமுக போட்டி**

1932 -ம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிராக முதன் முறையாக சி.கே.நாயுடு தலைமையில் டெஸ்டில் காலடி எடுத்துவைத்தது இந்திய அணி. கிரிக்கெட்டின் சொர்க்கபுரியாக கருதப்படும் லார்ட்ஸ் மைதானத்தில் இந்த போட்டி 3 நாட்கள் கொண்டதாக நடத்தப்பட்டது.

இந்த ஆட்டத்தில் இந்தியா 158 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இந்த ஆட்டத்தின் இரு இன்னிங்ஸிலும் இந்திய வீரர்கள் ஒருவர் கூட பவுண்டரி அடிக்கவில்லை. ஆனால் ஒரே ஒரு சிக்ஸர் அடித்திருந்தது. இதை 9-வது வீரராக களமிறங்கிய ரிச்சர்டு பிரவுன் அடித்திருந்தார்.

1932-1946-ம் ஆண்டு வரை இங்கிலாந்து அணியுடன் மட்டும் தான் இந்தியா டெஸ்ட் போட்டிகளில் விளையாடிக் கொண்டிருந்தது. இந்த 14 ஆண்டு கால இடைவெளியில் இரு அணிகள் இடையே 10 ஆட்டங்கள் மட்டுமே நடைபெற்றன. இதில் ஒன்றில் கூட இந்தியா வெற்றி பெறவில்லை.

1947-48-ம் ஆண்டு முதன் முறையாக ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து இந்தியா விளையாடியது. ஐந்து போட்டிகள

Web2PDF
converted by Web2PDFConvert.com

கொண்ட தொடரை இந்தியா 4-0 என இழந்தது. 1948 - 49-ம் ஆண்டில் மேற்கிந்திய தீவுகள் அணி, இந்தியாவில் விளையாடியது. ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் நான்கு ஆட்டங்கள் டிரா ஆனது. சென்னையில் நடைபெற்ற டெஸ்டில் மேற்கிந்திய தீவுகள் வெற்றி பெற அந்த தொடரிலும் வேதனையே ஏற்பட்டது.

20 ஆண்டுகள் கழித்து தான் இந்தியா முதல் வெற்றிக் கனியை பறித்தது. 1952-ல் ஹஸாரே தலைமையில் இந்தியா தனது 25-வது டெஸ்டில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இங்கிலாந்துடன் மோதியது. இதில் இன்னிங்ஸ் மற்றும் 8 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது இந்தியா. இந்தியா சார்பில் பங்கஜ் ராய், பாலி உம்ரிக்கர் இருவரும் சதம் அடித்தார்கள். வினூ மங்கட் 12 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். இந்திய அணியின் முதல் வெற்றி சென்னையில் அமைந்தது என்பது வரலாற்றுச் சிறப்பு.

முதல் வெற்றிக்கு பின்னர்தான் இந்திய அணியின் மீது ரசிகர்களின் கவனம் திரும்பியது. 1952 -1956 வரையிலான காலக்கட்டத்தில் 20 போட்டிகளில் இரண்டில் மட்டும் தோற்றது இந்திய அணி. ஆனால் அடுத்த 3 ஆண்டுகளில் 16 போட்டிகளில் 12 தோல்விகளை இந்திய அணி சந்தித்தது.

இதையடுத்து 1959-1961 வரை யிலான காலகட்டத்தில் விளையாடிய 14 டெஸ்ட் போட்டியில் மூன்றில் வெற்றி பெற்றது. ஒன்றில் தோற்றது. இந்த சீசனில் தொடர்ச் சியாக ஒன்பது போட்டிகளை இந்திய அணி டிரா செய்தது. இன்று வரை டெஸ்ட் கிரிக்கெட்டில் இது மிகப்பெரிய சாதனையாக கருதப் படுகிறது.

டெஸ்ட் உலகில் இந்தியாவை வெல்வது கடினம் என்ற சூழ்நிலை உருவாகிய நிலையில் மேற்கிந்தியத் தீவுகளின் வடிவில் ஆபத்து வந்தது. மேற்கிந்தியத் தீவுகளில் விளையாடிய இந்திய அணி 5 ஆட்டத்திலும் படுதோல்விகளை சந்தித்தது. இந்த தொடர் முடிந்தவேகத்தில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்த மேற்கிந்தியத் தீவுகள் அணி சொந்த மண்ணிலும் இந்திய அணியை அலறவைத்தது. இந்த வெற்றி களுக்கு பின்னர் கால் நூற்றாண்டுகளுகு மேற்கிந்தியத் தீவுகளின் ராஜ்ஜியம் தொடர்ந்தது.

1962-1883 காலக்கட்டங்களில் இந்திய அணி சுழற்பந்து வீச்சால் இந்திய துணைக்கண்ட போட்டிகளில் எதிரணியை சுழலால் மிரட்டியது. பிஷன் சிங் பேடி, பகவத் சந்திரசேகர், எரிப்பாலி பிரசன்னா, ஸ்ரீநிவாஸ் வெங்கட் ராகவன் ஆகியோர் சுழலில் மாயாஜாலம் காட்டினர். இவர்கள் நால்வரும் இணைந்து 231 போட்டி களில் மொத்தம் 853 விக்கெட்கள் சாய்த்தனர்.

1971-ல் போர்ட் ஆப் ஸ்பெயினில், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக முதல் டெஸ்ட் போட்டியில் அறிமுகமான சுனில் கவாஸ்கர் இரு இன்னிங்ஸிலும் அரைசதம் அடிக்க இந்தியா வெற்றி பெற்றது. கவாஸ்கரை தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளில் மொஹிந்தர் அமர்நாத், கபில்தேவ், ரவி சாஸ்திரி, பி.எஸ்.சந்து, வெங்சர்க்கார், கிர்மானி என நட்சத்திர கிரிக்கெட் வீரர்கள் இந்திய அணிக்கு கிடைத்தார்கள்.

1983 உலகக்கோப்பையை இந்தியா வென்றதும், இந்திய ரசிகர்களை கிரிக்கெட் ஆட்கொண்டு விட்டது என்றுதான் கூற வேண்டும். ஒவ்வொரு டெஸ்ட் போட்டியையும் ரேடியோ வர்ணனையில் கேட்ட ரசிகனின் காதுகளில் கிரிக்கெட் நாமம் புகுந்தது.

1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் இந்தியா-ஆஸ்தி ரேலியா அணிகள் முதல் டெஸ்டில் மோதின. ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 574 ரன்கள் குவித்தது. ஆஸி. கேப்டன் டீன் ஜோன்ஸ் இரட்டைச் சதமும், ஆலன் பார்டர், டேவிட் பூன் சதமும் விளாசினர்.

இந்திய அணியில் காந்த், ரவி சாஸ்திரி, முகமது அசாருதீன் அரை சதம் அடிக்க, கபில்தேவ் அதிரடியாக சதம் விளாசினார். இதனால் இந்தியா பாலோ ஆனை தவிர்த்தது மட்டுமில்லாமல் 397 ரன்களையும் குவித்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 170 ரன்களுக்கு டிக்ளேர் செய்தது. 348 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்த இந்திய அணி 347 ரன்கள் எடுத்தது. இதனால் வரலாற்றில் முதன் முறையாக இந்தியா விளையாடிய டெஸ்ட் போட்டி டை ஆனது.

உலக கிரிக்கெட் அரங்கில் இந்தியாவை தலைநிமிர வைத்ததில் சச்சின் டெண்டுல்கருக்கு முக்கிய பங்கு உண்டு. இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதுமுள்ள பல நாடுகளுக்கும் கிரிக்கெட்டை கொண்டு சேர்த்தார் சச்சின். 1989-ம் ஆண்டு கராச்சியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு எதிராக அறிமுகமானார் சச்சின். 16 வயதிலேயே புயலாக உருவெடுத்த சச்சின் சுழன்றடித்ததில் சாயாத பந்து வீச்சாளர்களே இல்லை.

கங்குலி கேப்டனான பிறகு இந்திய அணியை அடுத்த கட்டத் துக்கு எடுத்துச்சென்றார். 2000-2007 வரை சேவக், டிராவிட், லட்சுமணன், சச்சின், ஹர்பஜன் சிங், கும்ப்ளே என விளையாடும் லெவனில் நட்சத்திர பட்டாளமே இருந்தது. பேட்டிங்கில் சச்சின், கங்குலி, டிராவிட் லட்சுமண் ஆகியோரை கொண்ட நால்வர் கூட்டணி எதிரணிக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தது.

2001-ல் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கொல்கத்தா டெஸ்ட் இன்ற ளவும் வரலாற்றின் சிறந்த டெஸ்ட் போட்டியாக கருதப்படுகிறது. இந்த காலக்கட்டத்தில் சேவக் அடுத் தடுத்து அடித்த முச்சதம் பிரமிக்க வைத்தது.

2007-2011 வரையிலான காலக் கட்டம் இந்திய அணிக்கு பொற்காலம். கங்குலியால் விதைக்கப்பட்ட இந்திய அணி வெற்றியை அறுவடை செய்தது. டெஸ்ட் தரவரிசையில் முதன் முறையாக இந்திய அணி முதலிடம் பிடித்து அசத்தியது. உலகின் அத்தனை அணிகளையும் இந்தியா மிரள வைத்தது. இந்த காலக்கட்டத்தில் 47 போட்டிகளில் 22-ல் வெற்றி பெற்று வரலாறு படைத்தது இந்திய அணி.

2011-ம் ஆண்டு மத்தியில் இருந்து 2015 வரை இந்திய அணி கடும் சரிவை கண்டது. ஜாம்பவான் வீரர்கள் ஓய்வு பெற தோனிக்கு சோதனையாக அமைந்தது. இங்கிலாந்து, நியூஸிலாந்து, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா என சுற்றுப்பயணம் மேற்கொண்ட இடங்களில் எல்லாம் பெரும் உதை வாங்கியது. தொடர் தோல்விகளால் 2014-ம் ஆண்டு தோனி திடீரென டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்றார். அதுவும் ஆஸ்திரேலிய பயணத்தின் கடைசி கட்டத்தில். நட்டாற்றில் விட்ட கதையாக அணியை கையில் எடுத்தார் விராட் கோலி.

விராட் கோலியின் தலை மையில் முற்றிலும் மாறுபட்ட வியூகங்களுடன் வெற்றிகளை வசப்படுத்தி வருகிறது இந்திய அணி. கங்குலி உருவாக்கிய அணி யில் எப்படி ஒரு வெற்றி வேட்கை இருந்ததோ, அதனை தற்போது காணமுடிகிறது. இலங்கை, தென் ஆப்பிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளுக்கு எதிராக வரலாற்று சிறப்பு மிக்க தொடர் வெற்றிகளை பெற்றுள்ளது.

கடைசியாக விளையாடிய 11 டெஸ்ட் போட்டிகளில் ஒரு போட்டியில் மட்டுமே தோல்வி, ஆறு போட்டியில் வெற்றி என நேர்மறையாக இருக்கிறது இந்திய அணி. வெற்றி ஒன்றுதான் இலக்கு, அதுவே பிரதான நோக்கமாக கொண்டு அணியை வழிநடத்தும் விராட் கோலியிடம் இருந்து இன்னும் அதிக வெற்றிகள் கிடைக்கக்கூடும்.

Web2PDF
converted by Web2PDFConvert.com

## 73.மத்திய சுற்றுலா அமைச்சகம் தூய்மை வாரத்தை அனுசரிக்க முடிவு.

வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் தூய்மையைக் கடைபிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, மத்திய சுற்றுலா அமைச்சகம் தூய்மை வாரத்தை அனுசரிக்க முடிவு செய்துள்ளது. வெள்ளிக்கிழமை அன்று தொடங்கிய இந்த தூய்மை வாரம், இம்மாதம் 30-ஆம் தேதி வரை தொடரும்.

இந்தக் காலகட்டத்தில் பல்வேறு வகையான நிகழ்ச்சிகளை அமைச்சகம் நடத்த உள்ளதாக அரசு செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. முன்னரே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 10 சுற்றுலா தலங்களில் அதிகாரிகளும், பணியாளர்களும் துப்புரவுப் பணிகளில் ஈடுபடுவார்கள்.

புதுதில்லியில் உள்ள போக்குவரத்து அமைச்சக அலுவலகத்தில் பழையக் கோப்புகளை நீக்கி, அலுவலகத்திற்கு உள்ளேயும் அலுவலகத்தைச் சுற்றிலும் தூய்மைப் படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

தூய்மை குறித்த கட்டுரைப் போட்டிகள் ஆங்கிலத்தில் செப்டம்பர் மாதம் 24-ஆம் தேதியும், ஹிந்தியில் 25-ஆம் தேதியும் நடத்தப்படும். உலகச் சுற்றுலா தினமான செப்டெம்பர் 27-ஆம் தேதியன்று, போக்குவரத்துத்துறை அமைச்சக அலுவலகத்திலிருந்து இந்தியா கேட் வரை ஓட்டம் ஒன்று நடத்தப்படும் என்று அரசு செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

## 74.நாட்டிலேயே அதிக திறன்வாய்ந்த சிறப்புக் கணினியை ஐ.ஐ.டி கௌஹாத்தி இன்று பெறும்.

நாட்டிலேயே அதிக திறன்வாய்ந்த சிறப்புக் கணினியை ஐ.ஐ.டி கௌஹாத்தி இன்று பெறும். PARAM ISHAN என்று பெயரிடப்பட்டுள்ள அந்த சிறப்புக் கணினியை, கௌஹாத்தியில் உள்ள ஐ.ஐ.டி வளாகத்தில் மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் இன்று இயக்கி வைப்பார். Centre for Development of Advanced Computing என்ற மையத்துடன் இணைந்து, ஐ.ஐ.டி கௌஹாத்தி இந்த திறன்மிக்க கணினியை வடிவமைத்துள்ளது. வினாடிக்கு சுமார் 250 டிரில்லியன் புள்ளிகள் என்ற அளவில் செயல்படும் இந்த கணினி, 300 TB அளவிலான தரவுகளை சேமிக்கும் திறன் கொண்டது. இந்த சிறப்பு கணினியினால், ஐ.ஐ.டி கௌஹாத்தி கல்வி நிறுவனத்தின் மாணவர்களும், ஆசிரியர்களும் பயனடைவார்கள்.

## 75.நீர் போக்குவரத்து முறையை மேம்படுத்த, உலக வங்கி சுமார் ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு

அஸ்ஸாம் மாநிலத்தில், நீர் போக்குவரத்து முறையை மேம்படுத்த, உலக வங்கி சுமார் ஆயிரம் கோடி ரூபாயை முதலீடு செய்ய இருக்கின்றது. இதை, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் கட்கரி, மாநிலப் போக்குவரத்துத்துறை அமைச்சர் சந்திர மோகன் பாடோவரியிடம் தெரிவித்தார்.

தண்ணீர் துறைகள் உட்பட, உள்நாட்டு நீர் போக்குவரத்து முறையை மேம்படுத்த இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. துறைமுக அணைகரைகளை மறுகட்டுமானம் செய்ய, 100 சதவிகித மத்திய அரசின் உதவி அளிக்கப்படும் என்றும் நிதின் கட்கரி உறுதி அளித்தார். இதனிடையே, ஜோர்ஹாட்டில் இருக்கும் Tocklai தேயிலை ஆராய்ச்சி மையத்தில், தேயிலை தோட்டக்கலைப் பற்றிய வகுப்புகளை நடத்த, திரு. பாடோவரி, வர்த்தக அமைச்சர் நிர்மலா சீதாராமனை, தில்லியில் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார். தேயிலை வாரியத்தின் தலைமை அலுவலகத்தை கொல்கத்தாவிலிருந்து கௌஹாத்திக்கு மாற்றவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## 76.கங்கை நதிக்கரையை ஒட்டியுள்ள 5 ஆயிரம் கிராமங்களில், கரிம வேளாண்மை வளர்ச்சியில், வேளாண் அமைச்சகம் ஈடுபடும்

கங்கை நதியையொட்டி உள்ள 5 ஆயிரத்திற்கும் அதிகமான கிராமங்களின் விவசாயிகள், கரிம வேளாண்மையில் ஈடுபட ஊக்கம் அளிக்கும் நோக்குடன், வேளாண் அமைச்சகத்துடன், மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம், புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. கங்கை நதியில் உரம் கலந்த நீரினால் ஏற்படும் மாசுக் கட்டுப்பாட்டில், இது உதவிடும்.

புதுதில்லியில், நேற்று நடைபெற்ற புரிந்துணர்வு உடன்படிக்கை கையெழுத்தாகும் நிகழ்ச்சியில், மத்திய நீர்வளத் துறை அமைச்சர் உமா பாரதியும், வேளாண் துறை அமைச்சர் ராதா மோகன் சிங்கும் கலந்து கொண்டனர். இந்த உடன்படிக்கையின்படி, கங்கை நதிக்கரையை ஒட்டியுள்ள 5 ஆயிரம் கிராமங்களில், கரிம வேளாண்மை வளர்ச்சியில், வேளாண் அமைச்சகம் ஈடுபடும். Paramaparagat வேளான் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துடன் இணைந்து, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 77.17-வது அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் பயங்கரவாதம் பற்றி இந்தியா எழுப்பும் – குடியரசுத் துணைத்தலைவர் ஹமீத் அன்சாரி

வெனிசுலாவில் நடைபெறும் 17-வது அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் பயங்கரவாதம் பற்றி இந்தியா எழுப்பும். Margarita தீவில் நடைபெற உள்ள அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள சென்றுள்ள குடியரசுத் துணைத்தலைவர் ஹமீத் அன்சாரி கூறுகையில், சமூக மற்றும் சர்வதேச அமைதியை பயங்கரவாதம் இடையூறு செய்வதாகவும், மக்கள் அச்சப்படுத்தப்பட்டால், அவர்களால் தங்களது இயல்பை பின்தொடர முடியாது என்றார். ஆகவே, பயங்கரவாதம் தொடர்பான விவகாரம் இந்த மன்றத்தில் எழுப்பப்பட வேண்டும் என்றார்.

இந்த அமைப்பில் உள்ள 120 நாடுகளுக்கும் வளர்ச்சி தொடர்பாக ஓரே செயல்திட்டம் உள்ளதாக குறிப்பிட்ட அவர், ஆனால் நமக்கு அமைதியும், ஒருமைப்பாடும் தேவை என்றார். ஐ.நா.வின் சீர்திருத்தம் கொண்டு வருவது, மேற்காசியாவில் உள்ள நிலைமை, பருவநிலை மாற்றம் மற்றும் அணு ஆயுதங்களை களைவது போன்றவை குறித்து இந்த உச்சி மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

நாளை மறுநாள் நடைபெற உள்ள இந்த உச்சி மாநாட்டிற்கு, இந்தியப் பிரதிநிதிகள் குழுவிற்கு குடியரசுத் துணைத்தலைவர் ஹமீத் அன்சாரி தலைமை வகிப்பார். அமைச்சர்கள் நிலையிலும், மூத்த அதிகாரிகள் நிலையிலும் ஆலோசனை நடத்தப்படும். ஐ.நா அமைப்பிற்குப் பிறகு, அதிக நாடுகள் உறுப்பினராக உள்ள அமைப்பு அணிசேரா நாடுகளின் அமைப்பாகும். 55 ஆண்டுகளுக்கு முன்னதாக, உருவாக்கப்பட்ட இந்த அணிசேரா நாடுகள் அமைப்பின் நிறுவன உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## 78.இந்திய இசை மற்றும் நடன விழா சிட்னியில் துவங்கியது

இந்தியாவின் உயர்ந்த, பன்முகக் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் முதல் இந்திய இசை மற்றும் நடன விழா சிட்னியில் நேற்று துவங்கியது. பத்து வார காலத்திற்கு தொடர்ந்து நடைபெறவிருக்கும் இந்த விழாவை மத்திய கலாச்சார அமைச்சர் மகேஷ் ஷர்மா தொடக்கிவைத்தார்.

இந்திய – ஆஸ்திரேலியக் கலைஞர்கள் இணைந்து நடத்திய அற்புதமான நிகழ்சியுடன் விழா தொடங்கியது. இந்த விழா இரு நாடுகளுக்கும் பெருமை சேர்ப்பதாகக் கூறிய மத்திய அமைச்சர் மகேஷ் ஷர்மா, கடந்த பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் வலுவான தொடர்பை இரு நாட்டினரும் மகிழ்வுடன் அனுபவித்து வருவதாக கூறினார்.

2014 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோதியின் சிட்னி பயணத்தின் போது, இரு நாடுகளின் உறவைப் பலப்படுத்த இந்த முன்முயற்சி குறித்து அறிவிக்கப்பட்டதாக அந்நாட்டு அமைச்சர் ஜான் அஜக்கா கூறினார்.

உலகின் பெரிய பொருளாதார நாடுகளில் ஒன்றாக உருவெடுத்துவரும் இந்தியாவுடனான பொருளாதார உறவுகள் மேலும் வலுவடையும் என்று அவர் கூறினார். இந்திய அரசின் முயற்சியான இந்த கலாச்சார திருவிழா, ஆஸ்திரேலிய அரசின் ஒத்துழைப்புடன், மெல்பர்ன், பெர்த், பிரிஸ்பேன், கான்பெரா மற்றும் அடிலைட் ஆகிய நகரங்களிலும் நடைபெறும்.

## 79.இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

Shanmugam IAS Study Circle

Web2PDF
converted by Web2PDFConvert.com

78 வயதான இந்திய வம்சாவளி பிரிட்டிஷ்காரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான Lord Narendra Babubhai Patel-ஐ, மருத்துவ துறையில் ஆற்றிய சிறந்த பணிக்காக பிரபல பதிப்பாள் நிறுவனம் கௌரவித்துள்ளது. பிரிட்டனில் மருத்துவம் மற்றும் பொதுப்பணியில் இவர் ஆற்றிய சிறந்த பணிக்காக நேற்றிரவு நடந்த ஆசிய சாதனையாளர் விருதில் இவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.

## 80.ISSF ஜூனியர் உலக்கோப்பை: இந்தியா, 6 தங்கம், 4 வெள்ளி, 8 வெண்கல பதக்கங்களுடன் 2—வது இடத்தில் உள்ளது.

ISSF ஜூனியர் உலகக்கோப்பை துப்பாக்கி சுடல் போட்டியில், 25 மீட்டர் ராபிட் ஃபையர் பிஸ்டல் பிரிவில், இந்தியாவின் RUSHIRAJ BAROT , தங்கம் வென்றார். இந்தியா இதுவரை, 6 தங்கம், 4 வெள்ளி மற்றும் 8 வெண்கல பதக்கங்களுடன், பதக்க பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது. ரஷ்யா, 21 பதக்கங்களுடன் முதல் இடத்தில் இருக்கிறது. முன்னதாக, 10 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில், இந்திய ஆடவர் அணி, தங்கம் வென்றது. 5 மீட்டர் பிஸ்டல் பிரிவில், இந்திய ஜூனியர் ஆடவர் அணி, வௌளிப்பதக்கம் பெற்றது. ஜூனியர் மகளிர் பிரிவில், 10 மீட்டர் ஏர் ரைஃபிள் போட்டியில், இந்திய அணி, வெண்கல பதக்கம் வென்றது.

## 81.டிராக் ஆசியக் கோப்பை சைக்கிள் போட்டியில் மூன்று தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்களுடன் இந்தியா

டிராக் ஆசியக் கோப்பை சைக்கிள் போட்டிகள் 2016, நேற்று புதுதில்லியில் தொடங்கியது. தொடக்க நாளன்று, இந்தியா, மூன்று தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

Velodrome எனப்படும் உள் விளையாட்டரங்கு விரைவு சைக்கிள் போட்டியில், இந்தியாவின் Deborah Herold தங்கம் வென்றார். அணிகள் பிரிவில் Deborah Herold மற்றும் Kezia Vergheese அடங்கிய இந்திய அணி, கஸகிஸ்தான் அணியைத் தோற்கடித்து தங்கம் வென்றது. ஜூனியர் பிரிவில், இந்திய அணி வெள்ளிப் பதக்கம் வென்றது.

முதன் முதலாக, சர்வதேசப் போட்டியில் பங்கேற்கும் Alena Reji, வெள்ளிப் பதக்கம் வென்றார். 3 கி.மீ. போட்டியில் தமக்கு எதிராக போட்டியிடுபவர் போட்டியில் இருந்து விலகியதால், ராஜ்குமாரி தேவிக்கு வெண்கலப் பதக்கம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 82.ஆந்திர பிரதேசத்தில், விசாகபட்டினத்தில், 3—வது பிரிக்ஸ் நகரமயமாக்கல் கூட்டமைப்பின் மாநாடு இன்று தொடங்குகிறது.

ஆந்திர பிரதேசத்தில், விசாகபட்டினத்தில், 3 வது பிரிக்ஸ் நகரமயமாக்கல் கூட்டமைப்பின் மாநாடு இன்று தொடங்குகிறது. மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சர் வெங்கய்ய நாயுடு முன்னிலையில், மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, இந்த மூன்று நாள் மாநாட்டை துவக்கி வைப்பார். இந்த 3 நாள் கூட்டத்தில் முதலீடுகள், நகர மயமாக்கல், புதிய நகரங்களை உருவாக்குவது உள்ளிட்ட பல விஷயங்களை பிரிக்ஸ் பிரதிநிதிகள் விவாதிப்பார்கள். உற்பத்தியை அதிகரிப்பது, நகர்புறத்திற்கான தனிப்பட்ட நிதி வழி முறை மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவது போன்ற விஷயங்களும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும். இந்த விவாதங்களில் அடிப்படையில் வைசாக் பிரகடனம் தயாரிக்கப்படும், இது அக்டோபர் 15, 16 தேதிகளில், கோவாவில் நடைபெற உள்ள பிரிக்ஸ் அமைச்சர்கள் மாநாட்டில் முக்கிய பங்கு வகிக்கும்.

## 83.ஆயுஷ் எய்ம்ஸ் மருத்துவமனை தமிழகம் உட்பட 6 முதல் 10 மாநிலங்களில் அமைக்கப்பட உள்ளது—-ஆயுஷ் துறை இணையமைச்சர் ஸ்ரீபத் யெஸ்ஸோ நாயக்.

ஆயுர்வேதம், சித்தா, யோகா உள்ளிட்ட இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகளின் மூலம் சிகிச்சை அளிக்கும் வகையில் பிரத்யேக ஆயுஷ் எய்ம்ஸ் மருத்துவமனை தமிழகம் உட்பட ஆறு முதல் 10 மாநிலங்களில் அமைக்கப்பட உள்ளதாக மத்திய ஆயுஷ் துறை இணை அமைச்சர் ஸ்ரீபத் யெஸ்ஸோ நாயக் தெரிவித்துள்ளார். சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆயுஷுக்கென தனிப்பட்ட எய்ம்ஸ் மருத்துவமனை புதுதில்லியில் தற்போது அமைக்கப்பட்டு வருவதாகவும் இரண்டு மாதங்களுக்குள் இப்பணிகள் முடிவடைந்து திறக்கப்படும் என்று கூறினார். அலோபதி, ஆயுர்வேதம், யுனானி ஆகியவற்றின் மூலம் சுகாதார சேவை வழங்க தேசிய அளவில் ஒருங்கிணைந்த சுகாதார திட்டம் செயல்படுத்த திட்டமிட்டு, நாடு முழுவதும் 10 மாவட்டங்களை தேர்வு செய்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் முன்னோட்ட அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

.

Copyright © 2016 Shanmugam IAS Study Circle. All Rights Reserved

Web2PDF
converted by Web2PDFConvert.com